பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 219

## அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது

## நேற்று நாடாளுமன்றில் பெரும் அமளி துமளி

### ஆளுங்கட்சியினரால் சபைக்குள் பெரும் களேபரம்

கொழும்பு, ஜூலை 06

**அவசர காலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தின்போது நேற்று நாடாளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. ஆளும் கட்சியினர் சபா பீடத்தைச் சுற்றிவளைத்ததுடன் செங்கோலையும் தூக்கிச் செல்ல முயன்றனர்.**

**புடைவைக் கைத்தொழில் அமைச்சர் ஜெயதிஸ்ஸ ரணவீர செங்கோலைத் தூக்க முயன்ற போது படைக்கலசேவிதர் மிகவும் சாதுரியமாக அதைத்தடுத்து விட்டார்.**

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடிய போது தேசத்தைக் கட்டிஎழும்பும் அமைச்சர் ஜகத்புஷ்பகுமார சபையில் சிறப்புரிமைப் பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றினார்.

''செவனகல சீனித்தொழிற்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆனால் ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டு என்மீது பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி உள்ளனர். நான் சபையில் இல்லாதபோது எனது கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் பேசி உள்ளனர். இது எனது அரசியல் வாழ்க்கையில் பல தடைகளை ஏற்படுத்தும் '' - என்று கூறியபடி எதிர்க்கட்சியினரை சாட முயன்றார் அவர்.

அப்போது அரசாங்கக் கட்சியினருக்கும் ஐக்கியதேசியக் கட்சியினருக்கும் இடையில் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

''அமைச்சர் ஜகத்புஷ்பகுமாரவுக்கு எதிராக நீதிமன்ற வழக்குத் தொடரப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. எனவே நீதிமன்றத்தின் முன் உள்ள விடயங்கள் தொடர்பாக இங்கு எதுவும் பிரஸ்தாபிக்க இடமளிக்கக்கூடாது'' - என எதிர்க்கட்சிக் கொரடா ஜோஸப்மைக்கல் பெரேரா வலியுறுத்தினார்.

**ஆளும், எதிர்த் தரப்புகளுக்கிடையில் மூண்டது பெரும் சொற்போர்**

அப்போது ஆளும் தரப்பினருக்கும் எதிரணியினருக்கும் இடையில் சொற்போர் மூண்டது.

சபையில் ஓரளவு அமைதியை ஏற்படுத்திய சபாநாயகர் ஒரு விடயத்தைக் கூறினார்.

''அமைச்சர் புஷ்பகுமார தனது சிறப்புரிமை தொடர்பாகவே அறிக்கையொன்றைத் தாம் வெளியிடப் போகிறார் எனக் குறிப்பிட்டு அதன் பிரதி ஒன்றையும் என்னிடம் சமர்ப்பித்தார். அதில் வழக்குத் தொடர்பாக எதுவும் காணப்படவில்லை. அதன் பின்னரே அவருக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டது.'' - என்று சபாநாயகர் கூறினார்.

''உங்களிடம் காட்டிய விடயம் ஒன்று; ஆனால் இங்கே பேசப்படும் விடயம் ஒன்று. இவருக்கு எதிராக வழக்கு உள்ளது.'' -

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச்சட்டம் நேற்று நிறைவேற்றம்

அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை 109 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 119 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் கிடைத்தன. ஜாதிக ஹெல உறுமய, இ.தொ.க., முஸ்லிம்காங்கிரஸ், ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் அரசுடன் இணைந்து வாக்களித்தன. மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை.

மேலக மக்கள் முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்த்து வாக்களித்தன. ஐக்கிய தேசியக்கட்சி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. (சி)

## அமைச்சர் சந்திரசேகரனை சந்திக்க மங்கள விருப்பம்

கொழும்பு, ஜூலை 6

சுதந்திரக் கட்சி - மக்கள் குழுவின் ஏற்பாட்டாளரான மங்கள சமரவீர மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

மங்கள சமரவீர அணியினருடன் பேச்சு நடத்துவது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழுவுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (சி)

## மக்கள் நடமாட்டமும் சுறுசுறுப்பும் நேற்றுக் குடாநாட்டில் மிக மந்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். நகரப் பகுதியில் நேற்று சன நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

கரும்புலிகள் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் தாக்குதல் எதனையும் நடத்தக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் செவ்வாய், புதன்கிழமைகளில் படையினர் சோதனை நடவடிக்கைகளைக் குடாநாட்டில் அதிகரித்திருந்தனர்.

அதன் காரணமாக மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டது. கரும்புலிகள் தினமான நேற்று வீதிகளில் நடமாடுவதை மக்கள் வெகுவாகக் குறைத்திருந்தனர்.

பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள் என்பன வழமை போன்று இயங்கின. பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

எனினும் பொது மக்கள் தமது அன்றாட அலுவல்களை நேற்று மட்டுப்படுத்தி இருந்தனர்.

வங்கிகளில் நேற்று சனக் கூட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. யாழ். பஸ் நிலையப் பகுதியிலும் மக்களின் வருகை குறைந்திருந்தது. பயணிகள் வருகை குறைவாக இருந்தமையால் பஸ்களும் வெறுமையாகப் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

மக்கள் நடமாட்டம் இன்றி இருந்ததால் நகரில் வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்கள் மந்தமாகவே காணப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவிற்கும் குறைந்த எண்ணிக்கையான நோயாளர்களே வந்திருந்தனர்.

கரும்புலிகள் தினத்தையொட்டி வடமராட்சியில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

வடமராட்சியில் நேற்று சிறிய ஒழுங்கைகள் உட்படப் பல இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. வீதிகளில் அதிக அளவில் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

பல இடங்களில் கரும்புலிகள் தினச் சுவரொட்டிகளைக் காணக்கூடியதாக இருந்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாள் நேற்று முழுவதும் வன்னியில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி, ஜூலை 6

வன்னிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நாள் எழுச்சியுடன் நேற்று கொண்டாடப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் பொது இடங்களிலும், பாசறைகளிலும் கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தேசியக் கொடி ஏற்றி, ஈகச் சுடர் ஏற்றி, மலர் வணக்கம் இடம்பெற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வன்னியில் பிரத்தியேகமான இடமொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஈகச் சுடரேற்றி மில்லரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

கிளிநொச்சியில் நடந்த நிகழ்வுகளில் முதலாவது கரும்புலி மில்லர் உட்பட ஏனைய கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.

கரும்புலிகள் நாளை ஒட்டி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா தெற்குப் பகுதிகள் எங்கும் மஞ்சள், சிவப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

நேற்று நாள் முழுவதிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (அ-1)

## இன்னும் ஓரிரு நாள்களில் தொப்பிகல படையினர் வசமாகும்

### நாடாளுமன்றில் நேற்றுப் பிரதமர்

கொழும்பு, ஜூலை 6

தொப்பிகல (குடுமிமலை) பிரதேசம் அரச படையினரால் முற்றாக சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அடுத்த சில நாள்களில் அப்பகுதி அரசபடைகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும்.

பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகப் பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

படையினரின் அர்ப்பணிப்புக் காரணமாக கிழக்கின் அனைத்துப் பகுதிகளும் அரச கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டன. தொப்பிகல மட்டும்தான் எஞ்சியுள்ளது.

தப்பியோடிய புலிகள் தொப்பிகலவில் சிக்கியுள்ளனர். அவர்களுக்கான உணவு மற்றும் ஆயுதம் போன்றவற்றின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

படையினர் தொப்பிகலவை முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்திவருகின்றனர். இன்னும் ஓரிரு நாள்களில் தொப்பிகல அரசின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் உள்ளூராட்சி வேட்பு மனுக்கள் ரத்து

கொழும்பு, ஜூலை 6

''கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுக்களை ரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது''

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவசர காலநிலை மற்றும் பாதுகாப்பு அற்ற நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு ஒத்திவைக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண

(08 ஆம் பக்கம் பார்க்க)

**இ.போ.ச. ஊழியர், தபால் ஊழியர் காணாமற்போன சம்பவம்**

## பொலிஸ் விசாரணை திருப்தி அளிக்கவில்லை; பொறுப்பதிகாரியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் மற்றும் தபால் ஊழியர் காணாமற்போன சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இருவரும் காணாமற்போனமை தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணை திருப்தி அளிக்கவில்லை என்று தெரிவித்த நீதிவான் சாட்சியங்களை மீளப் பதியுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை காணாமற்போன இருவரும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் புங்குடுதீவிலிருந்து வேலணைக்கு கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாகவும் -

தபால் ஊழியரின் தபால் பொதி கல்லுண்டாய் பகுதியில் காணப்பட்டமை தொடர்பாகவும் - விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்தோடு காணாமற்போன இருவரின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் தம்பனையில் நேற்று மோதல் படைநகர்வு முறியடிக்கப்பட்டதாக அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 6

மன்னார் மாவட்டத்தில் தம்பனைப் பகுதியூடாக நேற்றுக்காலை 6.15 மணியளவில் முன்னேற முயன்ற படையினருடன் கடும் மோதல் இடம்பெற்றதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

படையினர் ஷெல் தாக்குதலுடன் முன்னேற முயன்றதாகவும் இந்த முயற்சியை தாம் முறியடித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இரண்டு மணிநேரம் நடைபெற்ற தாக்குதலின் பின் படையினர் பழைய நிலைக்குத் திரும்பினர் என்றும் இத் தாக்குதலில் பத்துப் படையினர் கொல்லப்பட்டனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தம்பனைப் பகுதி மோதல் குறித்து படைத்தரப்பு உத்தியோகபூர்வமான தகவல் எதனையும் வெளியிடவில்லை.

எனினும் மோதல் சம்பவம் ஒன்று தம்பனைப் பகுதியில் நடைபெற்றதாக படையினருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்ததாகவும், விடுதலைப் புலிகள் தரப்பில் 10 பேர் மரணமானதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி - எதிர்க்கட்சித் தலைவர் இருவருடனும் விசேட தூதர் யசூசி அகாஷி தொலைபேசியில் தொடர்பு

## இறுதித் தீர்வொன்றை வெளிப்படுத்த வற்புறுத்து

கொழும்பு,ஜூலை6

வடக்குக் கிழக்கு இனப்பிரச்சினைக்கு சர்வகட்சி மநாட்டின் மூலம் இறுதித் தீர்வொன்றைக் கொண்டு வருமாறு ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் தொலைபேசியில் தொடர்புகொண்டு வற்புறுத்தியிருக்கிறார்.

ஒஸ்லோவில் ஜூன்26ஆம் திகதி முடிவடைந்த இணைத் தலைமை நாடுகளின் மகாநாட்டையடுத்து இரு தலைவர்களையும் அகாஷி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார். பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வைக் காணுமாறு இரு தலைவர்களையும் அவர் வற்புறுத்தியிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

சர்வகட்சி மகாநாட்டின் செயற்பாடுகள் ஒரு தலைபட்சமாகவே இருக்கும் என்ற வகையில் இணைத்தலைமை நாடுகளின் மகாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே மற்றும் அமெரிக்க தரப்புக்கள் எதிர்மறையான நிலைப்பாட்டையே கொண்டிருந்தன.

ஆனால் ஜப்பானிய விஷேட தூதுவர் அகாஷி அதை மறுத்து அனைத்துக்கட்சி மாநாட்டின் மூலமே இலங்கையின் நீண்ட கால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று வாதிட்டதாகவும் கூறப்படுகின்றது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அரசியல் தீர்வு காண்பதில் அக்கறை காட்டாமல் இருப்பதால் அனைத்துக்கட்சி மாநாடு முட்டுக்கட்டையை எதிர்நோக்கியிருப்பதாக இணைத் தலைமை நாடுகள் கருதியதாகவும் ஆனால் அனைத்துக்கட்சி மாநாட்டில் சகல கட்சிகளும் ஒரு மித்த கருத்தைக் கொண்ட ஒரு தீர்வை முன் மொழிய வாய்ப்பிருப்பதாக அகாஷி வாதிட்டதாகவும் மேலும் அறிய வந்திருக்கிறது.

இந்நிலையிலேயே அனைத்துக்கட்சி மாநாட்டுத் தீர்வை விரைவுபடுத்தும்படி ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அழுத்தம் கொடுப்பதென இணைத் தலைமை நாடுகள் முடிவு செய்துள்ளன. இந்த வகையில் இரு தலைவர்களோடும் தொடர்பு கொண்டு பேசும்படி ஜப்பானிய விஷேட தூதுவரை அவர்கள் கேட்டுக்கொண்டதாகவும் அறியப்பட்டது. (அ-ப)


## UNIVERSITY OF JAFFNA
### FACULTY OF AGRICULTURE
**ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.Sc. AGRICULTURE (2006/2007)**

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna for Admission of Public Officers forDegree Programe to follow B.Sc Agriculture as internal students for the Academie year 2006/2007.

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the university
   OR
   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.
   AND
2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution,
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** Candidate should be less thean 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna. on a payment of Rs. 50/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by money order for Rs. 50/- drawn in favour of the Bursar. University of Jaffna with self addressed stamped envelop.

**Date of closing is 20th July 2007.**
Applications should be forwarded through the relevant Heads of Departments. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**REGISTRAR**
**05.07.2007** (C/52846)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.திருமதி சூரியகுமாரின் மகளும் யா/விக்னேஸ்வராக் கல்லூரி மாணவியுமான



**செல்வி சூ.வாசுகி**

2006ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண பரீட்சையில் 9A, 1B பெற்று பாடசாலை மட்டத்தில் முதல் நிலையில் சித்தி அடைந்துள்ளார். இவர் மேலும் பல சித்திகள் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

இந்து மாமன்றம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(62483)



## கண்ணீர் அஞ்சலி



**ச.மா.கந்தசாமி** *(விதானையார்)*
(மகாசபைத் தலைவர் - ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்)

துன்னையம்பதியிலே பிறந்து, கிராமத் தலைவராய் பணியாற்றிய ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் மகா சபைத் தலைவர் அமரர் ச.மா.கந்தசாமி அவர்களின் பிரிவு எமது ஆலயத்திற்கும் அவர் குடும்பத்திற்கும் பெரும் இழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மரு மக்கள் ஆகியோருடன் எமது துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம். அன்னார் மாயவன் அடியை அடைந்து முத்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**அறங்காவலர் சபை,**
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,
துன்னாலை வடக்கு, புலோலி.

(62485)


## விளையாட்டுப் போட்டி ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்படவிருந்த பிரதேசங்களுக்கிடையிலான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ். செயலக விளையாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (1-203)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 6

சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முன்னாள் ஆசிரிய ஆலோசகர் இராம ஈஸ்வரன் 'இன்பமேசூழ்க எல்லோரும் வாழ்க' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (203-29)

## நல்லூர்க் கோட்ட புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 6

நல்லூர் கல்விக் கோட்டத்தினர் நடத்தும் ஆண்டு ஐந்துக்கான மாதிரிப் புலமைப்பரிசில் பரீட்சை நல்லூர் வட்டாரப் பாடசாலைகள் அனைத்திலும் இன்று நண்பகல் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை இன்று முற்பகல் 10 மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)


**மனோகரா** யாழ்ப்பாணம்




**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3மாதங்களில் சரளமாகவும் 6 மாதங்களில் இலக்கண முறையிலும் சிறு குழுக்களாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. மாதக்கட்டணம் 500/- By. விக்னேஸ்வரன் ஆசான், 426(302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (62484)



யாழ். குடாவில் முதன் முறையாக அறிமுகமாகின்றது....!

**PMC** யின்

***Master Of English - VCD System***

"வீட்டிலிருந்தே இலகுவாக ஆங்கிலத்தில் பேசுவதற்கான 30 நாள் பயிற்சி" ஆங்கிலம் கற்க நேரமில்லை என ஏங்கும் தொழில் புரிபவர்கள், மாணவர்கள், ஆங்கிலம் கற்க நேரமில்லாத இல்லத்தரசிகள், வகுப்பறையில் சேர்ந்து கல்விகற்க கூச்சமுள்ள பெரியோர்கள், இளைஞர், யுவதிகள் அனைவரும் வீட்டில் இருந்தபடியே VCD பார்த்து 30 நாள்களில் சரளமாக ஆங்கிலம் பயில ஒரு சிறந்த திட்டம்.

*முற்பதிவுகள் நடைபெறுகின்றன.*

*இன்னும் சொற்ப பிரதிகளுக்கே முற்பதிவுகள் செய்யப்படும்.*

மேலதிக விவரமறிய:

PMC *தலைமையகம்* : 443, ஸ்ரான்லி வீதி , யாழ்ப்பாணம்.
*கமலக்கண்ணன் திருமண சேவை* : 171/7, மனோன்மணி அம்மன் வீதி, நல்லூர்.

(62490)


## மரண அறிவித்தல்கள்

### சங்கரன் வல்லிபுரம்

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரன் வல்லிபுரம் நேற்று (05.07.2007) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரன் - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் கீரிமலை, கருகம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் தேவபாஸ்கரன் (இத்தாலி), ஜெயச்சந்திரன், உதயகரன், கிரிதரன் (லண்டன்), பிரதீபன், சதீஸ்பாமா (திருகோணமலை) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் புஸ்பலீலா, சுதாஜினி, நறுமதா, பிரியா (லண்டன்), நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனும், கபீஸ்ஸன், கஜீபன், தயாபரன், தனுசன், கலைவேந்தன், திவ்யா, ஆரணி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி கிழக்கு ஊத்தல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.*
(சி-52848)
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### சின்னப்பிள்ளை சண்முகம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை சண்முகம் (04.07.2007) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும், அன்னப்பிள்ளை காலஞ்சென்ற் சிவசம்பு, நடராஜா, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் டிசாகினிதேவி, சந்திரகாந்தன், சசிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஸ்ரீ பாஸ்கரன், கஜந்தினி, விஜயகாந்தி ஆகியோரின் மாமியும், நிரோஜன், சிந்துஜா, கஜீபனா ரிஷிகாந், நிசாந்தினி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலிஸ் ரேசன் வீதி,*
*கச்சனா வடலி,*
*சுன்னாகம்.*
(62493)
**தகவல்:**
**ஸ்ரீ பாஸ்கரன்**
**(ஸ்ரீ - மருமகன்).**

### கந்தையா செல்லத்தம்பி



மண்டைதீவைச் சொந்த இடமாகவும் மார்க்கம்புரை கோப்பாயில் வசித்தவருமான கந்தையா செல்லத்தம்பி 05.07.2007 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் சீதாதேவி (கொலண்ட்), சிவகுமார் (ஜேர்மனி), கௌரிமாலா (ஜேர்மனி), வசந்தமலர் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பிரதேச சபை நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரசேகரம் (கொலண்ட்) லலீந்திரா (ஜேர்மனி), சோமசுந்தரம் (ஜேர்மனி), சத்தியசீலன் (லக்சன் போட்டோ) ஆகியோ ரின் அன்பு மாமனும் அமரர் மனோன்மணி, அமரர் நடராசா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மீனலோஜினி, பிரதாப், கௌசிகன், கபீனா, கீனா, விதுர்சனா, கோசிகா, ஜெனேசன், பிறேமலக்சன் (கோப்பாய் நாவலர் பாடசாலை), யதுர்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு கோப்பாயில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மார்க்கம்புரை,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*
**தகவல்:**
**க. சத்தியசிலன்**
**(லக்சன் போட்டோ).**

### திருமதி அந்தோனி சிசிலியா

சென். ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனி சிசிலியா நேற்று (05.07.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல் அந்தோனியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற டேவிட், ஜோர்ஜ் (கனடா), இருதயநாயகி, கிளரன்ஸ் மேரி பொன்றோஸ் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென். ஜேம்ஸ் வீதி,*
*இளவாலை.*
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து, வாகனக் கொள்வனவுக்கென அரச அலுவலர்களுக்குக் கடனுதவி

யாழ்ப்பாணம், ஜூலை 6

அரச அலுவலர்களுக்கு சொத்து மற்றும் வாகனக் கடன்களை வங்கிகளூடாக வழங்க அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்கா சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில் அரச அலுவலர்களுக்குக் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளும் நடைமுறைகளும் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

காணி அல்லது வீடு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கும் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கும் சொத்துக் கடன் வழங்கப்படவுள்ளது.

கடன் வழங்கும் நடைமுறை 2007 ஜூன் 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (202-207)



ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழாவில் விநோத உடைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தயார் நிலையில் நிற்கும் மாணவர்களைப் படத்தில் காணலாம்.
*(படம்: நவாலிச் செய்தியாளர்)*

# இடைநிறுத்தப்பட்ட வீதிப் புனரமைப்பை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை6

குடாநாட்டில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதியைத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

கடந்த வருடம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கெனத் திட்டமிடப்பட்டிருந்த புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இவற்றில் நெடுந்தீவுப் பிரதேச சபையின் 3 வேலைத்திட்டங்களையும் சாவகச்சேரி நகர சபையின் 4 வேலைத்திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிப்பதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (202-207)

# வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பிற்கென பயனாளிகளுக்கு மரக்கன்றுகள்

## கெயர் நிறுவனம் வழங்கவுள்ளது

வலி.தென்மேற்கு, ஜூலை 6

சர்வதேச கெயர் நிறுவனம் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிப்பதற்கென மாதகல், மாரீசன்கூடல், போயிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கவுள்ளது.

கொள்கலன்களில் வளர்க்கப்பட்ட கத்தரி, மிளகாய், கறிமிளகாய், வெண்டி ஆகிய மரக்கன்றுகளையே வழங்கவுள்ளது.

இதற்கென 5ஆயிரம் மரக்கன்று நாற்றுகளை கொண்ட கொள்கலன்களை கெயர் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மாதகல் விவசாயிகள் சம்மேளனம் தயாரித்து வருவதாகவும் - இக்கன்றுகள் வளர்ச்சியடைந்தவுடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார். (202-135)

# எரிசக்தி விநியோகத்தை ஸ்திரப்படுத்த அதிகாரசபை

கொழும்பு, ஜூலை6

ஸ்திரப்பாடான எரிசக்தி விநியோகத்தை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு, புதிய எரிசக்தி அதிகாரசபையொன்று நிறுவப்படவுள்ளது.

''எரிசக்தி அபிவிருத்தியைப் புதுப்பித்தல்'', ''எரிசக்தித்துறை சம்பந்தமான திறமைகளை அபிவிருத்தி செய்தல்'' ஆகிய இவ்விரு விடயங்களிலும் இச்சபை கூடிய கவனம் செலுத்தும்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

ஏனைய இதர நாடுகளிலுள்ள எரிசக்தித் துறைகளைப் போன்று இலங்கை எரிசக்தித் துறையும் துரித மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. அதேவேளை எண்ணெய் விலைகள் ஏற்றம், எரிசக்தி விநியோகத்துக்குப் போதிய பாதுகாப்பின்மை ஆகிய வெளிக்காரணங்களால் இங்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ''இவ் வெளிக்காரணங்களால் பொதுவாக இந்நாட்டின் பொருளாதார ஸ்திரப்பாடு ஆட்டங்கண்டுள்ளது. குறிப்பாக எரிசக்தித்துறை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எதிர்காலத்தில் ஸ்திரப்பாடான எரிசக்தி விநியோகத்தை மேற்கொள்வதற்கான திட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும்.

''இதற்காக உள்ளூர் மூலவளங்கள் தொடர்பான துறையும் முகாமைத்துவமும் அபிவிருத்தி செய்யப்படும். இதைப் போன்று எரிசக்திக் கொள்கையும் அபிவிருத்தி செய்யப்படும். இத்தகைய திட்டங்களைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். (சி)

# பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சைகள் நாளை பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜூலை6

முதலாவது சர்வதேச வானியல், 39ஆவது சர்வதேச பௌதிகவியல், 9ஆவது ஆசிய பௌதிகவியல், வான் பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சைகள் நாளை நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

அனுமதி அட்டைகள் சகல மாணவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும்-

அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் நேரடியாகப் பரீட்சை மண்டபத்திற்கு வருமாறும் போட்டிகளுக்கான வடமாகாண இணைப்பாளர் கலாநிதி நா.சிவயோகன் தெரிவித்தார்.

தொலைபேசி மூலம் பதிவுசெய்தவர்கள் விண்ணப்பப் படிவங்களுடன் பரீட்சை மண்டபத்திற்கு வருமாறும் அவர் கேட்டுள்ளார்.(202)

# தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக சகல தரப்புகளிடமும் வலியுறுத்துவோம்

## ஈ.பி.டி.பி.அறிக்கை.

யாழ்ப்பாணம், ஜூலை 6

எமது தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைச் சுதந்திரத்திற்கான தீர்வினை விரைவுபடுத்த வேண்டும் என நாம் அரசு உட்பட சகல தரப்பிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் - என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புலிகள் வன்முறை யுத்தத்தின் மீது மட்டும் மோகம் கொண்டவர்கள் என்பதற்காக அரசியல் தீர்வில் விருப்பம் கொண்டிருக்கும் எமது மக்களின் அபிலாஷைகளை யாரும் நிராகரித்து விடமுடியாது. அரசியல் உரிமைச் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கான எமது பாதையைப் பலப்படுத்தவும் உறுதுணையாக இருக்கவும் அனைத்து மக்களும் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் அணி திரள வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள்; சம உரிமையை விரும்புகின்றார்கள்; யுத்தமில்லாத ஓர் அமைதிப் பூமியில் வாழ விரும்புகிறார்கள். அமைதி, சமாதானம் என்பவற்றுக்காக அரசியல் உரிமையற்றவர்களாகவோ, இரண்டாந்தர பிரஜைகளாகவோ வாழ்வதற்கு எமது மக்கள் தயாரில்லை எனவும் எண்ணுகிறார்கள். யுத்தத்தை நிறுத்தி அமைதிப் பேச்சுவார்த்தையின் ஊடாக அர்த்தமுள்ள ஓர் அரசியல் தீர்வையே தமிழ் பேசும் மக்கள் விரும்பி நிற்கிறார்கள். மனித உரிமையும், மனித கௌரவமும் தமக்குத் தேவை என எதிர்பார்க்கின்றார்கள்.

நாம் எமது மக்களின் துயரங்களைத் துடைப்பதற்காக மக்கள் மத்தியில் நின்று நாளும் பொழுதும் உழைப்பவர்கள். அந்த வகையில் மக்களின் உணர்வுகளை நாம் சரிவரப்புரிந்து கொண்டு மக்களின் சாட்சியங்களாக சகல தரப்பிடமும் எமது மக்களின் விருப்பங்களை வலியுறுத்தி வருகின்றோம். கௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடமும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடமும் இதையே நாம் வலியுறுத்தி வருகின்றோம் - என்றுள்ளது. (202)

## 'கமநெகும' திட்டத்தின்கீழ் கொம்பனிப்புலம் கிராமம் அபிவிருத்தி

வலி. தென்மேற்கு, ஜூலை 6

மாகியப்பிட்டி கிராம அலுவலர் பிரிவிலுள்ள பின் தங்கிய கிராமமான கொம்பனிப்புலம் கிராமம் 'கமநெகும' வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் மாகியப்பிட்டி கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற்றது. கொம்பனிப்புலம் கிராம மக்கள், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதி நிதிகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இக் கிராமத்தில் மலசலகூடங்கள் அமைத்தல், வீதிகள் புனரமைப்பு, மின்சாரம் வழங்குதல், சொந்தக்காணி உள்ளவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்தல் ஆகிய பல்வேறு அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இக்கூட்டத்தில் வைத்து திட்டமிடப்பட்டுள்ளது. (202-135)

## விளையாட்டு விழா

புதிய செம்மணி வீதியில் உள்ள கலைவாணி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-203)

## சமய சந்நிதிகளில்

நல்லூர், ஜூன்6

நல்லூர் அருள்மிகு இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா எதிர் வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறும். கிரியைகள் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஆரம்பமாகும். எண்ணைக்காப்பு சாத்துதல் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 3மணிவரை இடம்பெறும். (1-111)

* * *

சுழிபுரம், ஜூலை6

சுழிபுரம் - பறாளை ஈஸ்வர விநாயகர் வருடாந்த மகா சங்காபிஷேகம் (1008 சங்கு) இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் ஆரம்பமாகி நடைபெறும். நண்பகல் அன்னதானம் நடைபெற்று பிற்பகல் சுவாமி வீதியுலா வருதல் நடைபெறும். (1-28)

* * *

வலி.தென்மேற்கு, ஜூலை6

பண்டத்தரிப்பு, காலையடி ஞானவேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேக தின அஷ்டோத்திர சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. விசேட பூசை, சண்முகார்சனை, திருவூஞ்சல் ஆகியன இதில் இடம்பெறவுள்ளன. (1-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை6

மீசாலை கிழக்கு பாலையடி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (1-207)

* * *

ஸ்ரீ கல்கி பத்மாவதி சமேத கல்கி பகவான் ஆகியோரது பஜனையும் பூசையு... இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.கச்சேரி கிழக்கு வீதியில் உள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் நடைபெறவுள்ளன. (203)

# மாகாண மேல்நீதிமன்றங்களில் மேன்முறையீட்டு மனுச் செய்ய வசதி

## 20 புதிய நீதிபதிகள் நியமனம்! விசாரணைகளை துரிதப்படுத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூலை6

சிவில் மேன்முறையிட்டு வழக்குகளை இனிமேல் மாகாண மட்டத்தில் உள்ள மேல் நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்வதற்கு வசதி செய்யப்படவுள்ளது. இதற்கெனப் புதிதாக இருபது நீதிபதிகளை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது என்று அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இது தொடர்பாக, நீதித்துறைத் திருத்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் சிவில் வழக்குகளை விசாரணைக்கு எடுப்பதற்கு நீண்டகாலம் எடுக்கிறது. இதனால் பெரும் எண்ணிக்கையான சிவில் வழக்குகள் விசாரணைக்கு எடுபடாமல் வருடக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன.

தேவையற்ற காலதாமதங்களையும், இழப்புகளையும் தவிர்ப்பதற்காக இனி மேன்மாகாண மேல்நீதிமன்றங்களும் சிவில் மேல்முறையீட்டு வழக்குகளைக் கையாளத் தக்கதாக அவற்றுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சிவில் வழக்குகளை மேல்நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு நீண்ட காலம் எடுத்தது. இனிமேல் இந்தத் தாமதம் இருக்காது. எவரும் மாகாண மேல் நீதிமன்றங்களை நாடி மேன்முறையீடு செய்து கொள்ளலாம்.

மேல்நீதிமன்றத்தில் மட்டுமே சிவில் வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கு தாமதமாவதால் மனுதாரர்களும் எதிர் மனுதாரர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். வருடக்கணக்கில் பணத்தையும் நேரத்தையும் வீணடிக்கும் நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு காலம் தாழ்த்தப்படுவதால் சாட்சிகளும் சாட்சியமளிக்கவருவதில்லை. இலங்கையில் நீதிச்சேவை மிகவும் சிறப்பானதாகவும் சுதந்திரமாகவும் உள்ளது.

இந்தச் சுதந்திரம் தக்கவைத்துக்கொள்ளப்படவேண்டும்.

நீதித்துறை மிகச் சிறப்பாக இயங்கிவருகின்றபோதிலும் வழக்குகள் கிடப்பில் போடப்படுவது ஒரு பெரிய குறைபாடாகவே இருந்தது. மாகாண மேல் நீதிமன்றங்களுக்கு மேல் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் வழங்கப்படுவதன் மூலம் அந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும்,அந்த மாகாண நீதிமன்றங்களுக்கு போதிய நீதிபதிகள் தேவைப்படுகின்றனர். அந்த வெற்றிடத்தையும் நிரப்புவதற்காக தற்போதுள்ள 40 நீதிபதிகளின் எண்ணிக்கையை 60 ஆக உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா விவசாய மாணவர் ஐவர் கொலை: கான்ஸ்டபிள் மீது வழக்குத் தாக்கலாகும்

கொழும்பு, ஜூலை6

2006 ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி தாண்டிக்குளம் விவசாய பாடசாலை மாணவர்கள் 5 பேர் கொல்லப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அனர்த்த மேலாண்மை மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசு ஒரு போதும் தடம்புரண்டதில்லை என்றார்.

அவர் மேலும் கூறுகையில்:-

புலனாய்வில் நேரில் பார்த்தவர்களின் தகவல்களின்படி, விவசாய பாடசாலைக்கு முன்னால் இராணுவ கனரகவாகனம் ஒன்று தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. அதன் விளைவாக இரு படையினர் உட்பட 5 பேர் கொல்லப் பட்டுள்ளனர். சம்பவத்துக்குப் பின்னர் அங்கு வந்த பொலீஸ் குழுவினர் கண்மூடித்தனமாக சுட்டதில் 5 மாணவர்கள் கொல்லப் பட்டார்கள். இதைத் தொடர்ந்து நடந்த பொலீஸ் புலன் விசாரணைகளையடுத்து இரு படையினரும் ஒரு கான்ஸ்டபிளும் விசாரணைக்காக கைது செய்யப்பட்டனர். பொலீஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக பலமான சாட்சியங்கள் பதிவாகியுள்ளன என்று கூறினார். பொலீஸ்மா அதிபரினால் பொலீஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவிருக்கிறது. (ப)

## வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலய புனர்நிர்மாணத்துக்கான பொதுக்கூட்டம்

மேற்படி புனர்நிர்மாணப் பொதுக்கூட்டம் 08.07.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருப்பலிக்குப் பின் நடைபெறும். இதில் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புனித செபஸ்தியார் தேவாலயம்,
வல்வெட்டித்துறை. (62487) பங்குத்தந்தை.

MICRO COMPUTER ACADEMY
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
NO-328,365 ARIYAKULAM JUNCTION
STANLEY ROAD, JAFFNA, SRILANKA.

கணனித்துறையில் நீண்ட கால அனுபவமிக்க விரிவுரையாளர்களின் சேவையின் கீழ் மிகக் குறைந்த கட்டணத்தில்...
யாழ். நகரில் முதன்முதலாக

GIT வழிகாட்டல் 2007 மாதிரி வினாவிடை வகுப்புகள்
(PAPER CLASSES)

எதிர்வரும் August மாதம் நடைபெறவுள்ள பொதுப் பரீட்சைக்கான எதிர்பார்க்கப்பட்ட மாதிரி வினாவிடை வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

மாதிரி வினாவிடை வகுப்பு 1 — 15.07.2007...
மாதிரி வினாவிடை வகுப்பு 2 — 22.07.2007...

1. முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட வினாக்களும் அவற்றுக்கான விடைகளும்
2. துறைசார் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்களின் வழிகாட்டல்
3. போதிய விளக்கக் குறிப்புகள் வழங்கப்படும்

மாணவர்கள் பதிவுகளை 10.07.2007க்கு முன்பதாக மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

M.C.A., JAFFNA, SRILANKA. T.P. 021 222 7866
(NEAR THE DMI)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை6

சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியைச் சேர்ந்த ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும், சாவகச்சேரியைச் சேர்ந்த மற்றவருக்கு 10 ஆயிரம்ரூபா அபராதம் விதித்த நீதிவான் இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் இரண்டு வருட நன்னடத்தைப் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.


சாவகச்சேரி மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இவ் வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

(202-207)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 - 05 - 1952

உதிர்வு 23 - 05 - 2007



### அமரர் கிருஸ்ணன் சிவபாலன்

(B.A., ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், நீதிமன்றம், வவுனியா)

என்பும் பிறர்க்கென
என்றும் வாழ்ந்த உங்கள்
அன்புப் பார்வை
எம்மை விட்டு அகலாது

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல.39, கொண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். மனைவி, பிள்ளைகள். (62480)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 07 - 1930

மறைவு 01 - 07 - 2002




### திருமதி பொன்னுத்துரை இராசம்மா

திதி: 06.07.2007

ஐந்தாண்டுகள் கடந்தும் - நம்
ஈரவிழிகள் காயவில்லை
சொல்லாமல் எங்குற்றாய்- நாம்
ஏங்குகின்றோம் உனைக் காண
அம்மா உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

25/7, அராலிறோட், ஒட்டுமடம். குடும்பத்தினர். (62478)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### வேலுப்பிள்ளை தம்பிராசா

(ஓய்வுபெற்ற அதிபர்)

மலர்வு 13.08.1938 — உதிர்வு 06.06.2007

திதி: சஷ்டி

தன்னை மெழுகாக உருக்கி எம்மைப் பிரகாசிக்க வைத்து கடந்த 06.06.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வில் நேரடியாகக் கலந்து கொண்டும், தொலைபேசி, துண்டுப் பிரசுரம், மலர்மாலை, பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி மற்றும் பிற வழிகள் மூலமும் அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் வாழும்:
குடும்பத்தினர்.

கோப்பாய் மத்தி. (62472)

## பசுக்கன்றை காணவில்லை

3½ மாத சிவப்பு நிறப் பசுக்கன்று 03.07.2007 முதல் காணவில்லை. (நல்லூர் பண்டாரக் குளப் பிள்ளையார் கோயிலடியில் கட்டியிருந்தது) இதைக் கண்டவர்கள் பஞ்சலிங்கம், பண்டாரக்குளம்பிள்ளையார் கோயிலடி, நல்லூர் என்னும் முகவரிக்கு அறியத் தரவும்.

(62488)

## 55ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 03 * 04 * 1947

மறைவு 13 * 05 * 2007



### அமரர் தம்பிராசா மகாலிங்கம்

பாசத்தின் ஒளிச்சுடரே அப்பா!
பூப்போன்ற நெஞ்சம் பேசாமல் போனதேன்
நெஞ்சம் இன்றும் பிரிவை மறுக்கிறதே அப்பா!
இதயத்தின் ஏக்கத்தை கண்ணீர்
துளிகளாலும் தணிக்க முடியவில்லையே!
எங்கள் இதயம் வெடித்துச் சிதறிவிட்டதே!
உங்கள் அன்பும் அரவணைப்பும் இல்லாமல்
வெறுமையாகி நிற்கும் நெஞ்சங்கள்
உங்கள் சாந்திக்காக இறைவனை வேண்டும்,
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
மருதம்குளம் வீதி, சாவகச்சேரி. (62479) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அகஸ்ரீன் (அழகையா) யேசுநேசன்

(கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புனித தோமையார் பதியை வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்ரீன் (அழகையா) யேசுநேசன் 04.07.2007 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி அகஸ்ரீன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அமரர் திரு. திருமதி ம.அந்தோனிப் பிள்ளை (குட்டிஞானி) அவர்களின் அன்பு மருமகனும் திருமதி யே.ஞானம் அவர்களின் அன்புக் கணவரும் செறின், சின்ரியாவேஜினி, மரியதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென்.தோமஸ் லேன்,
பருத்தித்துறை. (சி.52841)

தகவல்:
யே.ஞானம் (மனைவி).

07-07-2007 3 ஆவது Batch ஆரம்பம்



எங்களைப் போல் நீங்களும் கணினிப் பட்டதாரியாகலாம்

Degree Certificates awarded by Trinity University (USA Spain)

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் Higher Diploma கற்கைநெறியை தொடர்ந்து பயிலமுடியாதவர்கள் Degree யை குறுகிய காலத்தில் பயிலமுடியும்.

எமது பாடப் பரப்பினுள் அடங்கும் பாடங்களில் Diploma சான்றிதழை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பெற்றவர்களுக்கு விசேட வசதி செய்து தரப்படும்

எமது சான்றிதழுடன் 3வது வருடத்தில் காமராஜர் பல்கலைக்கழகத்தின் PGDCA யை இங்கேயே பெறலாம்

இது வரை விண்ணப்பிக்காதவர்கள் 7.7.07 அன்று அனுமதிக்கான ஒழுங்குகளுடன் நேரில் வரவும்

யாழ் நிறுவனத்தில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் விரிவுரைகள்

தொடர்புகளுக்கு

Prof. A. Sanmugadas,
Administrative Advisor.

NORTH LANKA IIT
The Srilankan Center of Trinity University USA
Main Street, Chankanai.
0773583616

NEW COLLEGE OF HIGHER STUDIES
No 95, Ariyakulam Junction, Jaffna
0212228148

"சொல்வதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி உயர்நீதிமன்றில் மனு



## வாசுதேவ நாணயக்கார தாக்கல்

கொழும்பு,ஜூலை6

அமெரிக்காவுடன் இலங்கை இரகசியமாகச் செய்து கொண்டதாகக் கூறப்படும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடக்கோரி ஜனநாயக சோஷலிஸ முன்னணியின் பொதுச்செயலாளரும் கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வாசுதேவ நாணயக்கார நேற்றுமுன்தினம் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமக்கு இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றார் என்று தெரிவித்துள்ள வாசுதேவ நாணயக்கார, இந்த ஒப்பந்தத்தின் பிரதியை முழு வடிவத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடுமாறும் மனுவில் நீதிமன்றைக் கோரியிருக்கின்றார்.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அமைச்சரவைக்குத் தெரியாத நிலையில் கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டிருக்கின்றது. இலங்கையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருகின்றனர்.

இத்தகைய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் அதிகாரம் ஏதும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குக் கிடையாது. அவர் வெறும் அரச ஊழியர் மட்டுமே.

ஒப்பந்தம் செய்வோர் தமக்கு அதிகாரமளிக்கப்படாத விடயங்களை ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொண்டால் அந்த விடயங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று நீதிமன்றம் அறிவித்து ரத்துச் செய்ய முடியும். ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இதற்கு நல்ல முன்னுதாரணம்.

இந்த ஒப்பந்தப்படி கொழும்பு, காலி, காங்கேசன்துறை, திருகோணமலைத் துறைமுகங்களையும், கட்டுநாயக்கா, இரத்மலானை, வீரவில விமான நிலையங்களையும் தம் விருப்பப்படி - சுதந்திரமாக - அமெரிக்கப் படைகள் பயன்படுத்த முடியும். இப்படி எமது உரிமையை தாரைவார்க்கும் நடவடிக்கைக்கு அனுமதியளிக்க முடியாது.

ஓர் ஒப்பந்தத்தில் இரு தரப்புகளும் சமனான பங்கும், பெறுபேறும் பெறும் வகையில் ஒப்பமிட்டால் அதில் அர்த்தமிருக்கும். ஆனால், இந்த ஒப்பந்தத்தில் முழு நன்மையும் அமெரிக்காவுக்குத்தான்.

ஆகவே -

✱மேற்படி ஒப்பந்தத்தின் முழு வடிவத்தையும் அப்படியே மறைக்காமல் நீதிமன்றுக்கு முன்வைக்கும்படி மனுதாரர்களுக்கு உத்தரவிடும்படியும் -

✱இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இல்லை எனப் பிரகடனப்படுத்தும் படியும் -

✱ சட்டமுறையற்ற இந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றது என அறிவித்து, அதை ரத்துச் செய்யப் பணிக்கும் படியும் -

உயர் நீதிமன்றத்தைக் கோருகின்றேன்.

- இப்படி வாசுதேவ நாணயக்கார தமது அடிப்படை உரிமை மீறல் மனுவில் தெரிவித்திருக்கின்றார்.

(சி)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஆண்டு விழாவை ஒட்டி உபகரணக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மாற்று வலுவுடையோர் உபயோகிக்கும் செயற்கை அவயவங்கள், சார்புறுப்புகள், சக்கர நாற்காலிகள், முச்சக்கர வண்டிகள் போன்ற நிறுவனத்தின் உற்பத்திகள் தொடர்பான கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம், 11ஆம் 12ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தில் இக்கண்காட்சி நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி வலேரி ஒபேட் கலந்து கொள்வார். (202)

# குருவருளும் திருவருளும்

அகத்திய மாமுனி முப்போதும், எப்போதும் சிவபொருமானை வழிபட்டு வந்தவர். கயிலையில் சிவபெருமானும், பொதிகையில் அவரது சீடனும் என்றென்றும் அருள்பாலித்து வருகின்றனர். அகத்திய மாமுனி வாழும் மலையாகிய பொதிகை சந்தனத் தென்றலும் தீந்தமிழும் தவளும் மலையாகும். பொதிகை மலையை புலவர்கள் தென்றலங்கிரி, செம்புவரை சந்தப்பொருப்பு ஏகபொதிகை, தமிழ்க்கிரி, மந்தமாருதவரை எனப் பல பெயர்கொண்டு பாடுவர். பொதிகையின் உச்சியில் அடிக்கடி கரிய மேகங்கள் கூடுவதும் உடனே மழை பெய்வதும் சகஜம். பொதிகை யாத்திரை மேற்கொள்ளும் சிவனடியார்கள் இந்த இன்ப நிலையை எய்துவர்.

பொதிய மலையில் இருந்து அருள் பாலிக்கும் அகத்தியர் முதற் தமிழ்ச்சங்கத்தில் சிவபெருமானுடன் உடன் இருந்து தமிழ் ஆய்ந்தவர். தொல்காப்பியருக்கு குருவாயிருந்து முன்னரே தமிழ் இலக்கணம் வகுத்தவர். முருகப் பெருமானைக் குருவாகக் கொண்டவர். அகத்திய மாமுனி. திருவிசைப்பா பாடிய கருவூர்த்தேவருக்கு காட்சி

ஞானக்கதிர்

தந்தவர். சிவபெருமானுடைய அறுபத்தி நான்கு திருவிளையாடல்களையும் அகத்தியர் எடுத்தக்கூற மற்ற முனிவர்கள் கேட்டறிந்தனர். இந்திரனுக்காகக் கடல் நீரை வற்றச் செய்தவர் அகத்தியர். சிவபரம்பொருள்வேண்ட புலவர் நக்கீரனுக்கு இலக்கணம் சொல்லிக்கொடுத்தவர். சிவபெருமானைத் தவிர வேறு எவரையும் வழிபடாதவர். பதினெண் சித்தர்களும் அகத்தியரையே குருவாகக் கொண்டனர். நினைத்த மாத்திரத்தே பரம்பொருளைக் காணும் வல்லமை பெற்றவர் இந்தக் குறுமுனி.

சிவபெருமானின் ஓர் அம்சமாகத் தோன்றிய கலசமுனி பிறக்கும்போதே ஞான ஒளியைத் தன்னகத்தே கொண்டிருந்தார். அகத்தியர் கும்பத்தில் தோன்றியவர். ஆகையால் கும்பமுனி எனப்பட்டார். சிவபெருமானிடம் வேதங்கள் ஆகமங்களைக் கேட்டறிந்தவர். இவரைத் தமிழ்முனி என்றும் அழைப்பர். தமிழ் மொழியை ஆதியில் வளப்படுத்தியவர் இந்தக் குறுமுனிதான். இராமர் கூட இந்தக் குறுமுனியைத் தேடிச் சென்று உபதேசம் பெற்றார். இராவணனின் ஆணவத்தை அடக்கியவர் அகத்தியர். உலோபாமித்திரையை மணந்த தமிழ்முனி பிறப்பு, இறப்பு இல்லாதவர். இவரால் பொதிய மலையின் புகழ் ஓங்கியது. இப்போது அருவ நிலையில் வாழ்ந்து வருகிறார். இவற்றிற்கு மேலாக இந்தக் குறுமுனி பொதிகையை அடைந்ததும் வடக்கும் தெற்கும் சமமாயினதென்றால் இந்த முனிவரின் குருவருள் எம்மாத்திரம்.

முன்னொருநாள் இந்திரன் சீர்காழியில் மூங்கில் வடிவாய் சிவனை நோக்கித் தவம் செய்தான். நாரதர் இந்திரனிடம் வருகை தந்து அவனது நலம் விசாரிக்க, இந்திரன் நாரதரை வணங்கி தனது சிவபூசைக்கு, நந்தவனம் நீர் இல்லாது வாடுகிறது என்றதும், நாரதர் அகத்தியரின் தென்நாடு வருகையைக் கூறி அவரது கமண்டலத்தில் உள்ள காவிரியை, நீ விநாயகப் பெருமானை வணங்கினால் இது கைகூடும் என்றார். அகத்தியர் குடகநாடு வர இந்திரன் விநாயகப் பெருமானை வணங்க விநாயகப் பெருமான் காக உருவில் தோன்றி அகத்தியர் தியானஞ்செய்யும் நேரம் பார்த்து அகத்தியரின் கமண்டலத்தில் உட்கார முனிவர் கையைத் தூக்கி காகத்தை விரட்ட, கமண்டலம் கவிழ, காவிரி ஆறாய் பெருகி இன்றும் தமிழ்நாட்டை வளம்படுத்தி வருகிறது.

''கும்ப மாமுனி நோக்கினன் கொடியுருக் கொண்டு
வம்பு நீடிய கரகநீர் கவிழ்த்தனன் மற்றும்
பம்பு வேதியன் என எதிர் பயின்றனன் இவன்தான்
வெம்பு தானவனோ பிறனோ என வெகுண்டு''

- விநாயக புராணம்.

பொ.சிவப்பிரகாசம்
*கொழும்புத்துறை.*

# கண்காணிப்புக் குழுவில் மேலும் 10 பேர் அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?

## புலிகளின் இராணுவப் பேச்சாளர் கேள்வி



கொழும்பு,ஜூலை6

கண்காணிப்புக் குழுவினர் 10 பேர் கூடுதலாக வந்திருக்கிறார்கள்தான். ஆனால் அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்றுதான் பார்க்கவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் (ATBC) செவ்வாய்க்கிழமை ஒலிபரப்பாகிய ''செய்தி அலைகள்'' நிகழ்ச்சிக்கு அவர் அளித்த செவ்வியில் கூறியுள்ளதாவது:-

சிங்கள அரசின் தமிழினத்தை அழித்தொழித்தல் எனும் தொடர்ச்சியான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் வன்னிப் பெருநிலப்பரப்பின் மீது பெருமளவிலான யுத்தத்தை முன்னெடுக்க முனைகிறது என்பதற்கு அப்பால், நாங்கள் ஓர் அரசை நடத்துகிற வடக்குப் பிரதேசத்தில் இராணுவ ரீதியான ஒரு வெற்றியைக் காட்டி தங்களுடைய அரசியல் பலத்தைத் தக்க வைக்க வேண்டிய தேவை ஒன்று மஹிந்த அரசுக்கு இருக்கிறது. அந்த வகையில்தான் இத்தகைய ஒரு நடவடிக்கையை மஹிந்த அரசு மேற்கொள்ள முனைகிறது.

புலிகளின் தாக்குதல்களை முறியடிக்க, மிக உச்சமான பயிற்சி பெற்ற - பிற படையணிகள் நம்புகிற படையணிகளை முன்னே நிறுத்தித்தான் பதில் தாக்குதலை மேற்கொள்ள வேண்டிய நிலைமை அங்குள்ளது. ஏனெனில், ஸ்ரீலங்காவின் அனைத்து படையணிகளுமே புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கும் என்பதல்ல.

ஸ்ரீலங்கா இராணுவமானது இழப்புகளின் மத்தியில் மன்னார் - மடுப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சித்தது. ஆனால், கடந்த ஆனி மாதம் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அந்த முன்னேற்ற முயற்சி முற்றாக முறியடிக்கப்பட்டது. அதனால் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், மற்றொரு போர் அரங்கை அமைக்க முயல்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால், அது மணலாற்றில் அமையுமா? வவுனியாவில் அமையுமா என்பது பற்றி முடிவெடுத்துவிட்டார்களா என்பது தெரியவில்லை. மணலாறைப் பொறுத்த வரையில் பாரிய சிங்களச்சதியின் பின்னணி உள்ளது. ஜே.ஆர். ஜெயவர்த்தன கொடுங்கோலாட்சியில் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் 42 கிராமங்களைச் சேர்ந்த 13,228 தமிழ்க் குடும்பங்களை வெளியேற்ற உத்தரவிடப்பட்டது.

### மணலாறு போர் முனை

அந்த வர்த்தமானி அறிவித்தலின்படி பச்சைத் தமிழ்க் கிராமங்களான செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், தென்னமரவாடி உள்ளிட்ட 42 கிராமங்கள் அனுராதபுரம் மாவட்டத்தின் நிர்வாக ஒழுங்குமுறையில் இணைக்கப்பட்டன. இதன் முக்கிய நோக்கம், தமிழர் தாயகத்தின் தொடர்நிலப் பரப்பில் வடக்கையும் கிழக்கையும் துண்டாடிவிட்டு நிலையான சிங்களக் குடியேற்றத்தை நிரந்தரமாக அமைக்கும் சதிமுயற்சியாக அது நிகழ்த்தப்பட்டது. அந்த சிங்கள ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடத்தப்பட முடியாவிட்டாலும் படை ஆக்கிரமிப்பு என்பது இன்னமும் உள்ளது. காடுகள் அதிகமாகவும் ஒன்றிரண்டு நீர்நிலைகளும் கொண்ட அரணாக உள்ளது. இதனைப் பயன்படுத்தி சில நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும். இருந்தாலும் அது எங்களின் இதயபூமி. அங்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு நாம் தரப்போகும் பதில் என்பது மிகக் காத்திரமானதாக இருக்கும்.

எந்த ஆக்கிரமிப்பாளனும் தனது ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுகின்ற சக்தியினது அடி ஆழமான மக்கள் ஆதரவுத் தளத்தைக் குறிவைத்து முறைகேடான தாக்குதல்களை நடத்துவது வழக்கம். அனைத்து ஸ்ரீலங்கா அரசுகளுமே இந்த உத்தியைப் பயன்படுத்தி வருகின்றன. இதில் மஹிந்த ராஜபக்ஷ ஒன்றும் விதிவிலக்கல்ல. தற்போது நடத்தப்பட்டுவரும் வான் தாக்குதல்களில் 90 விதமானவை பொதுமக்களை இலக்கு வைத்தே நடத்தப்படுகின்றன. ஆனால், எங்கள் மக்கள், இந்தச் சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியவர்களாக தங்கள் இடங்களில் கட்டுமானங்களை அமைக்கக் கூடியவர்களாகவும் உளவியல் தாக்கத்தை எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால், இந்த வான்படைத் தாக்குதல்களானது எமது மக்களிடத்தில் இனி மேலும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகமே.

எமது போராட்டம் மக்களுக்கானது. இந்த அச்சுறுத்தல் எழுந்த காலகட்டத்தில் மக்களின் வீடுகளுக்குச் சென்று தற்காப்பு தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தோம். எவ்வகையான குண்டுகளை வீசினால் எவ்வகையான தாக்கங்கள் ஏற்படும் என்றும் எத்தகைய கட்டுமானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் விவரித்தோம். வன்னிப் பெருநிலப்பரப்பில் எங்களது நிர்வாகப் பகுதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் பதுங்குகுழிகள் உள்ளன. வானூர்திகள் வானில் பறக்கும்போது எங்கள் குழந்தைகள் பதுங்குகுழிகளில் இருந்துவிட்டு மீண்டும் வெளியே வந்து படிப்பைத் தொடரும் அவலநிலை உள்ளது. பொதுஇடங்கள், சந்தைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றிலும் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். சிறுவர்களைப் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் பேசுகிற வெளிநாட்டு அமைப்புகள் இந்த விடயங்களில் வாய்மூடிக் கொண்டிருப்பது விநோதமான விடயம். எங்கள் தலைவரின் திட்டத்தின் அடிப்படையில் மிகக் கச்சிதமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சிறகு விரிக்கும் வான் படை !

தமிழீழ வான்படை தொடக்க நிலையில் உள்ளது. அது தனது அடுத்தடுத்த சிறகுகளை விரிக்கின்ற காலத்தை நாங்களும் எதிர்பார்த்திருக்கிறோம். ஒரு நாடும் இன்னொரு நாடும் நடத்தும் வான் சமருக்கான கலங்களை ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்துவருகிறது. வலுவுள்ள ஒரு வான் படை இங்கு இருப்பதால் அதனை எதிர்த்துப் போரிட வேண்டியுள்ளது என்பதை ஸ்ரீலங்கா அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

### கண்காணிப்புக்குழு என்ன செய்யும்?

கண்காணிப்புக் குழு மீண்டும் பணியைத் தொடங்க உள்ளதாகக் கூறியிருக்கிறது. அப்படியானால் அவர்கள் இவ்வளவு காலமும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இதையேதான் நாம் சந்திக்கும் கண்காணிப்புக் குழு நண்பர்களிடம் கேட்டுவருகிறோம். அவர்களினது செயற்பரப்பைச் சுருக்கி அவமானப்படுத்தி, ஒடுக்கி அவர்களை மூலையில் வைத்திருக்கிறது ஸ்ரீலங்கா அரசு. கண்காணிப்புக் குழுவினர் 10 பேர் கூடுதலாக வந்திருக்கிறார்கள்தான். ஆனால், அவர்கள் என்ன செய்ய போகிறார்கள் என்றுதான் பார்க்க வேண்டும்.

திருகோணமலை என்பது எமது தொன்மைத் தமிழர் நிலம். திருமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையே ஒரு சிங்களச் சொருகலை ஏற்படுத்த முயற்சிக்கிறது சிங்களம். குறிப்பாக, இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க சிங்களம் முயற்சிக்கிறது. மகாவலி திட்டத்தை அம்பலப்படுத்தினால் வாகரை வரை சிங்களக் குடியேற்றம் நீளும் அபாயம் உள்ளது. சேனநாயக்க, ஜயவர்த்தனாவை போல் சம்பூர் பகுதியை மஹிந்த ராஜபக்ஷ சட்டம் மூலம் சிங்களக் குடியேற்றமாக்க முயற்சிக்கிறார் - என்றார் இளந்திரையன்.

*(இதே செவ்வியின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியது)* (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து




சந்தை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த
நிறஞ்சன் - தர்மினி தம்பதியரின்
செல்வப்புதல்வி
**சானுகா**



தனது 2ஆவது பிறந்ததினத்தை இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் முத்துமாரி அம்மன் அருளால் சகல கலைகளும் பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

**நிறஞ்சன் நகை மாடம்**
சந்தை வீதி, உடுப்பிட்டி.

(62407)

## விற்பனைக்கு

4000 ஓடுகள்,
4 பனை வளைகள்,
30 மொன்ரசரி பிளாஸ்ரிக் கதிரைகள்,
06 பிளாஸ்ரிக் மேசைகள்.

*அம்மன் தேவஸ்தானம்,
கலட்டி,
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.*

(62470)

# நூறாவது பிறந்தநாள் வாழ்த்து




## திருமதி சிவயோகரத்தினம் இலங்கைநாயகம்

**06.07.1907 → 06.07.2007**

இந்து சமுத்திரத்தில் இலங்கிடும் முத்தாம்
இயற்கை வளம்நிறை ஈழத்திரு நாட்டின்
சென்னியில் அமைந்திட்ட சிறப்புறு யாழ். நகரில்
இல்லையென்பதே இல்லாத இன்பம் நிறை
இளவாலை யம்பதியில்
இலங்கைநாயகத்தைத்தன் பிராணநாதராய் வரித்து
வள்ளுவன் வாசுகி வாழ்ந்த நல்லறமாம்
இல்லறத்தில் நீங்கள் இனிதாய்ப் பிரவேசித்து
ஆணொன்றும் பெண்மூன்றும் அழகாய் ஈன்றெடுத்து
ஏழ்மையோ செல்வமோ எதுவந்த போதும்
ஏகமாய் நின்று எதிர்நீச்சல் போட்டு
இராணுவ நடவடிக்கையாலும் இடம் பெயராதிருந்து
வாழ்வில் உயர்ந்து வல்லவராய் வாழும்
என்னுள்ளம் கவர்ந்த அன்னையின் அன்னையே!
அன்பே உருவான என் அம்மம்மாவே!
பேரன் பேத்திகளிடம் பேதம் எதுவுமின்றி
பெற்றவரும் உற்றவரும் பெருமையாய் மதித்திட
ஆண்டுகள் நூறு அழகாய் வாழ்ந்திட்டீர்!
ஆண்டுகள் நூறென்ன அறுநூறு சென்றாலும்
அகிலம் போற்றிடும் அன்னையாய் வாழ்வீர்கள்!

*அன்புடன் வாழ்த்துவோர்:*
*பேரன்* **முகுந்தன் குடும்பத்தினர்.**

**வவுனியா.** (62410)

# தற்போது விற்பனையில்



**பாக்யா** சிறுவர் மாத இதழ்

**மாணவர்கள் பயன் பெறும் வகையில் மாதந் தோறும் வெளிவருகின்றது!**

கிடைக்கும் இடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.
செல்லாச்சி புத்தகசாலை, பருத்தித்துறை.
மேலதிக தொடர்புகளுக்கு:- 077 3053129

## தம்பசிட்டியில் அறநெறிப் பாடசாலை

யாழ்ப்பாணம்,ஜூலை6

தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்று இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் இணைந்து சமயக் கல்வியை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் தொடர்புகொள்ளலாம் என சங்கம் தெரிவித்துள்ளது. (202-160)

## விற்பனைக்கு

**Suntel தொலைபேசி இணைப்பு உடன் விற்பனைக்குண்டு.**

தொடர்பு: *மாலை 6 மணிக்குப் பின்*
**021 222 3862, 0112553612**

(62477)

## விற்பனைக்கு


HONDA SUPER CUP C 50 SELF START மோட்டார் சைக்கிள் (நீலம்) விற்பனைக்குண்டு.

தொடர்பு:S.S.**நாதன்,**
**இல.16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். T.P.: 0776146434**

(62463)

# 3ஆம் ஆண்டு நினைவுகளுடன்

அமரர்
**வேலுப்பிள்ளை குமாரசாமி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.04.1936 | 07.07.2004 |

*நிலவுலகில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த பெருமரம் நீங்கள் இன்று
இல்லையே - பப்பா
நீரின்றிய தாவரம் போல் உங்கள்
பிரிவால் தவிக்கின்றோம்
நீங்காது உங்கள் நினைவு எம்
உயிர் உள்ளவரை.*

**கைதடி மேற்கு,
கைதடி.** (62469)

**குடும்பத்தினர்.**

# The phone Shop Manipay

எம்மிடம் சகலவிதமான **Hand Phone** களும்

* Soft ware
* Hard ware

Repairing செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91 என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.

Address:
**The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910

(62457)

# நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்!**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chilaw.
(Reg.No. 6382)AR/PR/No-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** *எங்களின் பொன்னாங்காணி தைலத்தின் பெட்டியில் எழுத்து மிகவும் தெளிவாகத் தெரியும். போலியான பொன்னாங்காணி தைலத்தின் எழுத்து தெளிவற்றதாக இருக்கும். அத்துடன் போலிப் பெட்டிகளின் அடிப்புறத்தில் உற்பத்தித் திகதியும் முடிவு திகதியும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து போலித் தயாரிப்புக்களை நீங்கள் கண்டுகொள்ளலாம்.* (சி-52815)

# CDகள் மூலம் Spoken English

வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேசக் கற்றுக்கொள்ள சகல அடிப்படை பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் இலகுவான முறையில் தமிழ்மொழி மூலம் 4ACDகள்+20VCDகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வேலையை எதிர்பார்ப்போர், வீட்டில் இருக்கும் பெண்கள், ஆங்கில வகுப்புக்குச் செல்லக் கூச்சப்படும் வயது வந்தோர் ஆகியோருக்கு மிகவும் உகந்தது. ஆங்கில ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக அமையும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம். குடும்பமாகவும் ஆங்கிலம் பேசக் கற்றுக் கொள்ளலாம். முயற்சி உடையவர்கள் இதன் மூலம் நிச்சயமாக ஆங்கிலம் பேசக் கற்றுக்கொள்ளலாம்.

முன்பதிவுகள் செய்துகொள்வதன் மூலமே பெற்றுக் கொள்ளமுடியும்.

முன்பதிவுகளிற்கு முந்துங்கள். முன்பதிவுசெய்யும் இடங்கள்.

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். | கத்தோலிக்க விற்பனை நிலையம் (பஸ்தியன் சந்தி), 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 021 222 9041 |
| காருண்யா வைத்திய நிலையம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 021 2223795 | காவேரி பார்மசி, கொக்குவில் சந்தி, கொக்குவில். |
| மெடிலான்ட் பார்மசி, ஆலடி சந்தி, மானிப்பாய் | Thurka Bookshop, Bus stand, Chunnagam. 021 222 6267 |
| ராஜலக்ஷ்மி மல்ரி பலஸ், நெல்லியடி, கரவெட்டி. | றேனி மூக்குக்கண்ணாடி அகம், கண்டி றோட், (AGA's Office அருகில்), சாவகச்சேரி. |
| றேனி மூக்குக்கண்ணாடி அகம், 88, பிரதான வீதி, பருத்தித்துறை. | மெடிலான்ட் பார்மசி, பிரதான வீதி, சங்கானை. |

# விழிநீர் சொரிகின்றோம்

*எமது சபையில் கடமையாற்றும்*
**இ.ஜோர்ஜ்**
*அவர்களின் அன்புத் தாய்*
**திருமதி தொம்மை ஐயாத்தை**

*04.07.2007 அன்று காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

***ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊழியர் நலன்புரிச் சங்கம்.***

(சி/52832)

# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

## வினாவிடைப் போட்டி

*2007ஆம் ஆண்டில் சர்வதேச கூட்டுறவு தினவிழாவை ஒட்டி யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் வினாவிடைப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் ''செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத்தொகுதி, 2ஆம் மாடி, இலக்கம்.12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 18.07.2007ஆம் திகதிக்கு முன் தொடர்புகொண்டு வினாக்கொத்தைப் பெற்றுக்கொள்ளவும். வினாக்கொத்தினைப் பூர்த்திசெய்து 20.07.2007இற்கு முன் ஒப்படைத்தல்வேண்டும்.*

(சி/52831) **செயலாளர்.**

# கண்ணீர் அஞ்சலி

*எமது சக ஆசிரியர்*
**ஜெயக்குமார்**
*அவர்களின் தந்தை*
**கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி**
(இளைப்பாறிய விவசாய திணைக்கள உத்தியோகத்தர்)

*அவர்கள் இறையடி எய்திய செய்தியறிந்து பெருந்துயரடைகிறோம். அன்னாரின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

***அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,***
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.**

(62465)

# அரசாங்க அறிவித்தல் மீள் கேள்வி அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை - யாழ்ப்பாணம்.

சமுத்திர தீபம் அம்புலன்ஸ் படகு திருத்த வேலை குறிகட்டுவான்

மேற்படி வேலைக்கு மீளக்கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் படிவக்கட்டணமாக ரூபா 250/= ஐயும் பிணைப்பணமாக 5000/= ஐயும் செலுத்தி எதிர்வரும் 11.07.2007ஆம் திகதிக்கு முன்னர் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் யாவும் 12.07.2007ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்னதாக உரிய கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
*பிராந்திய பணிப்பாளர்,*
*சுகாதார சேவைகள் - யாழ்ப்பாணம்.*
*04.07.2007*
*கு/ச.*

(சி/52833)

# கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி



**Belarus** *(பெலாரூஸ்)*, **Poland** *(போலாந்து)*, **Ukraine** *(உக்ரைன்)*, **Russia** *(ரஷ்யா) பிரபல பல்கலைக்கழகங்களில் மருத்துவம்* **(M.B.B.S., MD)**, *பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல் கற்கை நெறிகள்*

15 - July வரை அனுமதிகள் யாழ். நகரில் வழங்கப்படுகின்றன.

• இல. 02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. 0777250555, ( 021 222 8247 - இரவு 7 மணிக்குப் பின்) A/L இம்முறை எடுக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். பரீட்சை முடிந்தவுடன் பயணம்.

(சி.52820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விளங்காமல் பேசும் தலைவர்கள்

தற்போது ஆளும் தரப்பு முன்வைத்திருக்கும் தேர்தல் சீர்திருத்த ஆலோசனைகளை நாடாளுமன்றம் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், அவற்றை நடைமுறைப்படுத்தும் அனுமதியை மக்களிடம் நேராகப் பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரசமைப்பு விவகார அமைச்சரும் மூத்த இடதுசாரியுமான டி. ஈ. டபிள்யூ. குணசேகரா இப்படி உரைத்திருக்கின்றார்.

நாட்டின் அரசமைப்பு விவகார அமைச்சரே இவ்வாறு கூறியிருப்பது குறித்து அழுவதா, சிரிப்பதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் மக்கள்.

நாட்டின் அரசமைப்புச் சட்டம் புரியாமல் அரசமைப்பு விவகார அமைச்சர் பேசுகின்றாரோ என்ற சந்தேகம் சட்டம் புரிந்த சாதாரண மக்களுக்கும் எழுகின்றது.

இந்த அரசு தற்போதைய தனது நடவடிக்கைகள் மூலம் - அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை வாயிலாக - பிரேரித்திருக்கும் உத்தேச தேர்தல் சீர்திருத்தச் சட்டம், சிறுபான்மை இனங்களை - குறிப்பாக மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் - நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அடியோடு பாதிக்கச் செய்யும் கபடச்சதியை உள்நோக்காகக் கொண்டது. அது மட்டுமல்ல. சிறுபான்மையினரின் கட்சிகளில் தங்கியிருந்து தான் அரசு அமைக்க முடியும் என்ற தற்போதைய இக்கட்டிலிருந்து பெரும்பான்மைச் சிங்களவர்களின் பெரிய கட்சிகளை விடுவித்து, அவை தனித்து ஆட்சி அமைத்து, எதேச்சாதிகாரம் செய்வதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்துவதும் இத்திட்டத்துக்குள் பொதிந்து கிடக்கின்றது.

அது ஒரு விடயம். ஆனால் இத்தகைய தேர்தல் சீர்திருத்தத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காவிட்டால் மக்களிடம் சென்று சர்வஜன வாக்கெடுப்பு மூலம் - அதுவும் அதன் முடிவு கட்டுப்படுத்தாத தீர்ப்பாக அமையத்தக்கதான கருத்துக்கணிப்பு (Non - Binding Referendum)வாயிலாக - அங்கீகாரத்தைப் பெற்று அச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தலாம் என்ற கருத்தும், எண்ணமும் கேலிக்குரியவை; சட்ட ரீதியாக வாய்ப்பே அற்றவை; சாத்தியப்படாத விவகாரம்.

மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தொடர்பான அரசமைப்பு ஏற்பாடுகளை மாற்றியமைக்கும் இந்த உத்தேசத் தேர்தல் சீர்திருத்தம், சட்ட ரீதியான அந்தஸ்துப் பெற வேண்டுமானால், அதற்கேற்ற வகையில் அரசமைப்பை மாற்றுவது தவிர்க்க முடியாத அவசியமாகும்.

அரசமைப்பை மாற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயமானதாகும். சில சமயங்களில் - அந்த அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் - அதை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினரின் ஆதரவோடு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அனுமதியையும் பெற வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிடவும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

ஏற்கனவே இத்தகைய விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நோக்குபவர்கள், அரசின் உத்தேச தேர்தல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதானால், இந்த இரண்டையுமே - நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கு எம். பிக்களின் ஆதரவு மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்கள் அனுமதி ஆகிய இரண்டையுமே - கட்டாயம் நிறைவு செய்யவேண்டியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்வர்.

இது, அரசமைப்பு விவகார அமைச்சருக்குப் புரியாமல் இருப்பது விந்தைதான்.

இத்தகைய ஒரு சிறு திருத்தம் ஒன்றை அரசமைப்புக்கு செய்வதற்கு முன்னைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு முயன்று மூக்குடைபட்டதை அரசமைப்பு விவகார அமைச்சர் அறிவாரா? இது தொடர்பாக அரசமைப்புக்கு அந்த அரசினால் கொண்டுவரப்பட்ட திருத்தம் நிறைவேற்றப்படாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருப்பதையும், அதனால் அத்திருத்தம் நடைமுறைக்கு வராமல் போனமையையும் சட்டத்துறை தொடர்பானவர்கள் மறந்து போயிருக்க மாட்டார்கள்.

1977இல் நடந்த பொதுத் தேர்தலில் கலவானைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஐ. தே. க. வேட்பாளரான பலப்பிட்டிய அபேரட்ண பண்டார ஹேரத்துக்கு எதிராக அத்தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சரத் முத்தெட்டுவேகம தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் தாம் தோற்கலாம் என்று அஞ்சிய பலப்பிட்டிய, ஒரு தந்திரம் செய்தார். 1978 இறுதியில் நாடாளுமன்றுக்கு முன்அனுமதி யின்றி மூன்று மாதங்கள் பிரசன்னமாகாமல் தவிர்த்து அதன் மூலம் 1979 ஜனவரி 5 ஆம் திகதி தமது எம்.பி. பதவியை இழந்தார். இந்நிலையில் பன்னிரண்டு நாள்கள் கழித்து அத் தொகுதிக்கு அவரையே தமது புதிய எம். பியாக ஐ. தே.க.நியமித்தது. அதையடுத்து கலவானைத் தொகுதியின் நியமன எம். பியானார் அவர்.

இந்நிலையில் மேற்படி தேர்தல் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனால் அத்தொகுதிக்கு இடைத் தேர்தலும் நடந்தது. அத் தேர்தலில் பலப்பிட்டிய போட்டியிடவில்லை. ஆளும் ஐ. தே. கட்சியும் வேட்பாளரை நிறுத்தவில்லை.

கலவானைத் தொகுதியில் ஏற்கனவே நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரே பதவியிழந்துள்ளார். அத் தொகுதிக்குப் பின்னர் தாங்கள் நியமித்த வேட்பாளர் பதவியிழக்கவில்லை என்று ஐ. தே. க. முன்வைத்த வாதத்தை அப்போதைய சபாநாயகர் ஏற்றுக் கொண்டதால் ஒரு புறம் கலவானைத் தொகுதி இடைத் தேர்தல் நடக்க, மறுபுறம் கலவானைத் தொகுதியின் எம். பியாக ஐ.தே. கவின் நியமன அங்கத்தவர் பலப்பிட்டிய தொடர்ந்து நாடாளுமன்றத்தில் விளங்கினார்.

இந்நிலையில் 1981 ஜனவரி 12 இல் நடந்த இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியின் சரத் முத்தெட்டுவேகம-வெற்றியீட்டினார். அவருக்கு நாடாளுமன்றத்தில் ஆசனம் வழங்குவதாயின் நாடாளுமன்றின் உறுப்பினர் எண்ணிக்கையை ஒன்றால் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வேறு வழியின்றி - இடைத் தேர்தலில் வென்ற சரத் முத்தெட்டுவேகமவுக்கும், அதே தொகுதிக்கு தாங்கள் முன்னர் நியமித்த பலப்பிட்டியவுக்கும் இடமளிப்பதற்காக - எம். பிக்கள் எண்ணிக்கையை ஒன்றால் அதிகரிக்கும் அரசமைப்புத் திருத்தத்தை ஐ.தே.க. அரசு கொண்டுவந்தது.

நாடாளுமன்றில் அப்போது இரண்டில் மூன்றுக்கும் அதிகமாக, ஆறில் ஐந்து பெரும்பான்மையை வைத்திருந்த ஜெயவர்த்தனா அரசினால் அந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற முடியவில்லை. முட்டுக்கட்டை போட்டுவிட்டது உயர்நீதிமன்றம். அவ்வாறு எம். பிக்கள் எண்ணிக்கையை மாற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கு ஆதரவோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறவேண்டும் எனத் தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

தமது விருப்பப்படி ஓர் எம். பிக்கு இடமளிப்பதற்காக பல கோடி ரூபா செலவில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதா என்ற மலைப்பில் அந்த அரசமைப்புத் திருத்தத்தை அப்படியே பொத்தெனக் கைவிட்டது அந்த அரசு. பலப்பிட்டியவை தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு வீட்டுக்குப் போகுமாறு அரசு பணிக்க, 1981 ஜனவரி 15இல் அவர் ராஜினாமாச் செய்தார். அவரது ஆசனத்தில் இடைத் தேர்தலில் வென்ற சரத் முத்தெட்டுவேகம அமர, பிரச்சினை தீர்ந்தது.

ஆக, இந்தப் பட்டறிவை தற்போதைய அரசமைப்பு விவகார அமைச்சர் ஒரு தடவை புரட்டிப் பார்ப்பாரானால், நாட்டின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ முறையையே தலைகீழாக மாற்றும் தேர்தல் சீர்திருத்தத்தை வெறும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்ற தாற்பரியம் அவருக்கு சுலபமாகப் புரியும். இத்தகவல் அவருக்குச் சமர்ப்பணம்.

# சிவில் நீதிமன்றம் ஒன்றில் ஜனாதிபதியிடம் கேள்விகள் கேட்க ஐ.தே.க. ஆவல்!

கொழும்பு,ஜூலை 6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சிவில் நீதிமன்றம் ஒன்றின் முன் நிறுத்தி பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல கேள்விகளை அவரிடம் கேட்க ஐ.தே. கட்சி சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கின்றது.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் இப்படித் தெரிவித்தார் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகங்களுக்கு எதிராக ஜனாதிபதி இழப்பீடுகள் கோரி கடிதங்கள் அனுப்பியிருக்கிறார். அவைகளுக்கு எதிராக ஜனாதிபதி வழக்குகள் தொடர்வாரானால் அவர் சிவில் நீதிமன்றங்களின் முன் தோன்ற வேண்டியிருக்கும்.

தம்மை அவதூறுக்குட்படுத்தியிருப்பதாக பல ஊடகங்களுக்கு எதிராக ஜனாதிபதி இழப்பீடு கோரி கடிதங்கள் அனுப்பி வைத்திருக்கிறார். அவைகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வதாயின் அதனை சிவில் நீதிமன்றங்களில் தான் அவரால் செய்ய முடியும். அங்கே அவர் ஏனையவர்களைப் போல் தோன்றி சாட்சியமளிக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பம் வருமானால் பல விடயங்கள் தொடர்பாக அவரிடம் கேள்விகள் எழுப்பப்படும்.

குற்றவியல் அவதூறு சட்டம் அமுலுக்கு வருமானால் வழக்காளி நீதிமன்றத்துக்கு வர வேண்டியதில்லை. பிரதிவாதிகளை நீதிமன்றத்துக்கு கொண்டு வராமலே ஊடகத்துறையினரைத் துன்புறுத்துவதற்கு அரசாங்கம் முயல்கின்றது.

ஊடகத் துறையினர் அச்சமின்றி உண்மைகளை எழுத வேண்டும். இன்றைய நிலையைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும் - என்று அவர் மேலும் சொன்னார். (ப)

# இ.தொ.காங்கிரஸுடன் மங்கள அணி சந்திப்பு

கொழும்பு,ஜூலை 06

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவினருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் இ.தொ. கவின் தலைமையகமான சௌமிய பவனில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் சார்பில் முன்னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இ.தொ.கா.சார்பில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம், ஆர்.யோகராஜன் மற்றும் பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தற்போது உள்ள நடைமுறை அரசியல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன - என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# களநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டாலேயே பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக முடியும்

## நோர்வே அவசரப்படும் நிலையில் இல்லை

கொழும்பு,ஜூலை 6

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க அனுசரணைப் பணியில் நோர்வே தரப்பினர் அவசரப்பட்டு இறங்கும் நிலையில் இப்போது இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

செய்திகளில் வெளியானது போல் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்சன் போவர் உடனடியாக வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்று கொழும்பிலுள்ள நோர்வே தூதரகப் பேச்சாளர் எரிக் நுரென் பேர்க் தெரிவித்தார்.

''அப்படியான திட்டம் எதுவும் இல்லை. செய்திகள் யாவும் வெறும் எதிர்வு கூறல்களே'' என்றார் நுரென் பேர்க்.

கள நிலைகள் மேம்படுமானால் எதிர் வரும் மாதங்களில் அவ்வாறான ஒரு விஜயம் சாத்தியப்படக்கூடும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின்படி பேச்சுக்கான முயற்சிகள் எதுவும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அரசாங்கம் முதலில் வடக்கு - கிழக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

பேச்சுவார்த்தைகளை மீளவும் புதுப்பிப்பதற்கு ஜப்பான் உட்பட பல தரப்புகள் பல தடவைகளில் முயன்ற போதிலும் அது சாத்தியமாகவில்லை. கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிராட்ஸ்கர் இரண்டு தடவைகள் புலிகளுடன் பேச்சு நடத்த வன்னிக்குப் போக முயன்றார். எனினும் அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்காமையால் பயணத்தை ஒத்திப் போட நேர்ந்தது.

கொழும்பிலுள்ள சுதந்திர அமைதிக் குழு வொன்று களநிலைகளில் எதுவித மாற்றத்தையும் காட்டுவதாகத் தெரியவில்லை. எல்லாம் பேச்சளவிலேயே உள்ளது என்று கருத்துத் தெரிவித்தது.

பேச்சுக்கள் எதுவும் வெற்றிபெற வேண்டுமானால் ஆயுத மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும். நிச்சயமாக கள நிலையில் மோதல்கள் முற்றுப்பெற வேண்டும் - என்று இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ''என்றாலும் நாங்கள் நம்பிக்கை இழக்க வில்லை'' என்றும் அவர் கூறினார்.

வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் உண்மையான எண்ணம் அரசுக்கு இல்லை. சர்வதேச மற்றும் ஐ.நா. அழுத்தங்களின் காரணமாகவே பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக அரசு கூறுகிறது என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(அ-ப)

# ஐ.தே.க. மாற்றுக் குழுவினரும் அவதூறுச் சட்டத்துக்கு எதிர்ப்பு

அரசுடன் இணைந்துள்ள ஐ.தே. கட்சி மாற்றுக்குழுவினர் குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டுவருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நேற்று கொழும்பு செத்செவனவில் இடம்பெற்ற ஊடகவியலார் மாநாட்டில் ஐ.தே.கட்சி மாற்றுக் குழுவின் உறுப்பினர் அமைச்சர் நவின் திஸநாயக்க தமது எதிர்ப்பை வெளியிட்டார்.

அரசினால் கொண்டுவரப்படவுள்ள ஊடகவியலாளர்களை ஒடுக்கும் குற்றவியல் அவதூறுச் சட்டத்திற்கு ஐ.தே. கட்சி மாற்றுக்குழு எவ்விதத்திலும் உடன்படாது. நாம் அரசுடன் இணைந்தமைக்கான காரணம் நாட்டை ஒழுங்கான முறையில் நிர்வகிப்பதற்கே அன்றி ஊடகவியலார்களை ஒடுக்குவதற்கல்ல - என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

இது குறித்து ஐ.தே.கட்சி மாற்றுக் குழு உறுப்பினர் அமைச்சர் மஹிந்த விஜயசேர தெரிவித்திருப்பதாவது:-

அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் எதிரணியினர் செயற்பட்டு வருகின்றனர். அரசை கவிழ்த்துவிட்டு ஆட்சிப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது? அதற்கு தகுதியானவர் யார்? அரசைக் கலைக்கச் செய்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை பிற்போட்டுவிட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எண்ணுகிறார். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. அப்படி ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

தற்போது எமது பாதுகாப்பு தரப்பினர் கிழக்கில் பல பகுதிகளைக் கைப்பற்றி அப்பகுதிகளை அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். அரசு பாதுகாப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டிருக்கும் இச் சமயத்தில் அபிவிருத்தித்திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது - என்றார். (சி)

# மக்களின் வங்கித் தேவைகளைப் பூர்த்திசெய்ய வீடுகளுக்குச் சென்று அலுவலர் பணியாற்றுவர்

## இலங்கை வங்கியின் குடாநாட்டுக் கிளைகள் புதிய திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

சேமிப்பு மாதத்தையொட்டி இலங்கை வங்கி குடாநாட்டு மக்களின் வங்கித் தேவைகளைக் கண்டறிந்து பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கென குடாநாட்டில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளின் அனைத்து ஊழியர்களும் பொது மக்களின் இருப்பிடங்களுக்கு நேரடியாகச் சென்று அவர்களது வங்கித் தேவைகள் பற்றி ஆராயவுள்ளனர்.

இலங்கை வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வங்கியின் சேமிப்பு மாதமாக இந்த மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனையொட்டி இலங்கை வங்கியின் அனைத்து ஊழியர்களும் இந்த வருடத்தில் வரும் தமது 8 லீவு நாள்களில் ஊதியம் பெறாமல் வங்கிக்காக உழைப்பது எனத் தீர்மானித்துள்ளனர்.

### முதற்கட்டப் பணி நாளை ஆரம்பம்

இதன் முதற்கட்டப் பணி நாளை 7ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. அன்று காலை குடாநாட்டில் உள்ள சகல இலங்கை வங்கி ஊழியர்களும் குழுக்களாகப் புறப்பட்டு பொதுமக்களின் இருப்பிடங்களுக்குச் செல்வார்கள். அங்கு பொது மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் வங்கித் தேவைகளை அறிந்து அந்த இடத்திலேயே அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர். இலங்கை வங்கியில் கணக்குகளைப் பேணாதவர்களும் அன்று புதிய கணக்குகளைத் திறக்க முடியும்.

இலங்கை வங்கி பல்வேறு சமூக அபிவிருத்திப் பணிகளை மக்கள் மத்தியில் மேற்கொள்கின்றது. இந்தப் பணிகள் பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் சமூக மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்கால மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு வங்கியியல் சம்பந்தமான விரிவுரைகளையும் நாம் பாடசாலைகளில் ஒழுங்கு செய்து வருகிறோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் தற்போது கடன்கள் வழங்கப்படுகின்றன. அவை எதுவும் நிறுத்தப்படவில்லை. தென்னிலங்கையில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அவை அனைத்தும் குடாநாட்டு இலங்கை வங்கிக் கிளைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

சுய தொழில் மற்றும் விவசாயக் கடன் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்களின் சம்பளப் பணத்தில் 75 வீதமான பணம் இலங்கை வங்கியாலேயே வழங்கப்படுகின்றது.

அரச ஊழியர்கள் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருந்தால் தமது சம்பளப் பணத்தை நாம் அவர்களது கணக்குகளில் வைப்பிலிட முடியும். தன்னியக்க இயந்திரங்கள் மூலம் அவர்கள் தமக்குத் தேவையான பணத்தை தேவையான நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களுக்கு கடன் வசதிகளும் கிடைக்கும்.

குடாநாட்டில் இலங்கை வங்கிக் கிளைகளில் மிக விரைவில் வலைப் பின்னல் சேவை (Online System) கொண்டுவரப்படவுள்ளது. அதன் மூலம் பல நன்மைகள் எமது வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் - என்று விவரித்தார்.

(அ-50-111)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 23 | சனிக்கிழமை |
| | 07.07.2007 |
| திதி : சப்தமி | மு.ப 11.03 |
| நட்சத்திரம் : | சித்தம் |
| | பி.ப. 02.37 |
| சுபநேரம் | : 02.58 - 04.28 |
| ராகுகாலம் | : 08.58 - 10.28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதியற்ற நடைப்பிணங்களாக நவ்றூ தீவில் 83 ஈழ அகதிகள்!

## தஞ்சம் கேட்டு ஆஸ்திரேலிய மக்களுக்கு உருக்கமான கடிதம்

சிட்னி, ஜூலை 6

தென்பசுபிக்கில் அமைந்துள்ள நவ்றூ தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 83 இலங்கையர்கள் ஐந்து மாதங்களுக்குப் பின்னர் 'நடைப்பிணங்களாகி' விட்டனர். இவர்கள் உளரீதியான பெரும் பாதிப்புள்ளாகியிருப்பர் என அகதிகள் நலன் காப்பக அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

இவர்கள் அனைவரும் அரசியல் தஞ்சம் புகும் நோக்கில் புறப்பட்டவர்களாவர். இவர்கள் பயணித்த படகு, பெப்ரவரியில் கிறிஸ்மஸ்தீவுக்கப்பால்கடற்படையினரால் தடுக்கப்பட்டது.

இதையடுத்து இவர்கள் சிறிய தென்பசுபிக் தீவான நவ்றூவிலுள்ள முகாமொன்றுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தமக்கு அகதிகள் அந்தஸ்து வழங்குமாறு, ஆஸ்திரேலிய மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து, உருக்கமான கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்கள்.

அவர்கள் தம் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:-

நாங்கள் படுமோசமான நிலைக்குள் சிக்கியிருக்கின்றோம். எதிர்காலத்தை நிர்ணயிக்கவோ - நிதானிக்கவோ - முடியாத நிலை. பீதி எம்மை விட்டு நீங்கவில்லை.

எங்கள் நாட்டில் நாங்கள் சொல்லொணா அவலங்களுக்கு உள்ளானோம். அங்கு மனித உரிமைகளுக்கோ - ம[illegible]த உயிருக்கோ - கிஞ்சித்தும் மதிப்பில்[illegible]ல. இச்சமயத்தில் தான், மனித உரிமைகளையும், மனித உயிரையும் பெரிதாக மதிக்கும் [illegible]டான, ஆஸ்திரேலியாவை நோக்கி, அ[illegible]யல் தஞ்சம் கோருவதற்காக வந்தோம்.

உயிரைக்காக்க, அகதி அந்தஸ்து கோரி வந்தோம். எனினும், இப்போது நாங்கள் நடைப்பிணங்களாகிவிட்டோம். நிச்சயமற்ற எதிர்பார்ப்[illegible]டு உழல்கின்றோம்.

ஆஸ்திரேலியர்களுக்கு, தங்களின் நிலைவரத்தை மாற்றியமைப்பதற்கான சக்தி உண்டு. தங்களின் நடவடிக்கைகளுக்கு - கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்குமாறு வாக்காளர்களை வலியுறுத்தக் கூடிய வல்லமை உண்டு.

இதுவரைஎங்களுக்குஅகதிகள் அந்தஸ்து வழங்கப்படவில்லை. இப்போது நாங்கள் நவ்றூவில் வசிக்கின்றோம். எங்கள் மத்தியில் நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற விரக்தியே தலைதூக்கியுள்ளது.

''இப்போது அகதிகள் அந்தஸ்து கோரி, உருக்கமாக விண்ணப்பித்துள்ளோம். இதற்குப் பின்னராவது, ஆஸ்திரேலிய அரசினதும், மக்களினதும் ஆதரவு எமக்குக் கிட்டுமென நம்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# மட்டு. செங்கலடியில் கருணா குழுவுடன் ஈ.பி.டி.பி அணியினர் கடும் மோதல்!

## படைமுகாம் அருகே சம்பவம்; சிலர் பலி! பலர் காயம்!!

கொழும்பு, ஜூலை 06

மட்டக்களப்பு, செங்கலடிப் பகுதியில் - கொம்மாந்துறை படைமுகாமுக்கு அருகே - இரு ஆயுதக் குழுவினரிடையே புதன் கிழமை மாலை கடும் மோதல் இடம் பெற்றிருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

கொம்மாந்துறை படைமுகாமுடன் சேர்ந்து செயற்பட்டுவரும் கருணா குழுவினரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் மோதிக்கொண்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோதலில் ஈடுபட்ட இரு குழுக்களையும் கட்டுப்படுத்த இராணுவத்தினர் தலையிட்டுதுப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள நேரிட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் கருணா குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஈ.பி.டி.பியைச் சேர்ந்த இருவர் பாடுகாயமடைந்தனர் - என்று ஒரு தகவல் தெரிவித்தது. எனினும் உயிரிழந்தோர் மற்றும்காயமடைந்தவர்களின்எண்ணிக்கை மேலும் அதிகம் என்று வேறு தரப்புக் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் இக் குழுக்களுக்கிடையிலான மோதலினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் உருவாகி இருக்கின்றது.

மோதலின்போது கைக்குண்டுகள் வீசப்பட்டதில் வீடுகள் சேதமடைந்தன என்றும் கூறப்பட்டது. (சி)

# அமைச்சரை எச்சரித்தார் சபாநாயகர்!

கொழும்பு, ஜூலை 6

நாடாளுமன்றத்தை விளையாட்டு மைதானமாக்கி விடக் கூடாது. அங்கும் இங்கும் ஓடித்திரிந்தும் துள்ளிப்பாய்ந்தும் சபையின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்த வேண்டாம்.

தொழில் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு மேற்கண்ட எச்சரிக்கையை சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்ரணவிரபத்திரன, தொழில்உறவு அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் வாகனப் பாவிப்பு குறித்துக் கேள்வி எழுப்பினார்.

வாகனங்கள் தொடர்பாக பதில் அளித்த அமைச்சர், உண்மை விடயங்களை வெளியிட்டால் பயங்கரவாதிகளுக்கு தகவல் கொடுப்பதாக அமையும் என்று கூறினார்.

இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. இதன் போது சபாநாயகர் அமைச்சருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

''அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு தான் பலமுறை அறிவுரை கூறியதுடன் கடுமையான எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளேன். ஆனால், அமைச்சர் அவற்றைப் பின்பற்றுபவராக இல்லை. சபையில் ஓடித்திரிவதும், துள்ளிக் குதிப்பதும், மேலும் கீழும் பாய்வதும் நாகரிகமாகாது. சபையை விளையாட்டு மைதானமாக்கிவிடக் கூடாது. இது எனது கண்டிப்பான எச்சரிக்கை. அமைச்சர் மேர்வின் சில்வா கௌரவமாக நடந்து கொள்ளவேண்டும்.'' - என சபாநாயகர் அறிவித்தார். (சி)

# அவசரகாலச் சட்ட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்த் தரப்பினர் வலியுறுத்தினர்

**குற்றச்சாட்டை மறுத்தார் அமைச்சர்**

இதனை அமைச்சர் புஷ்பகுமார மறுத்தார். ''செவனகல சீனித் தொழிற்சாலை அசம்பாவிதங்களுடன் எனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. எனக்கு எதிராக எந்த ஒரு வழக்கும் இல்லை.'' - என்றார் அமைச்சர் புஷ்பகுமார.

''ஐயா! இந்த அமைச்சர் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கின்றார். இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அமைச்சரின் செயற்பாட்டைக் கண்டித்து உயர்நீதிமன்றம் கடும் உத்தரவு வழங்கியுள்ளது.'' - என்றார் ஜோஸப் மைக்கல் பெரேரா.

''நீங்கள்கூறுவது சரியானால் அந்த வழக்கின் இலக்கம் என்ன ?'' - என்று சபாநாயகர் திருப்பிக் கேட்டார்.

''சபாநாயகர் அவர்களே! இந்த விடயம் பல்வேறு ஊடகங்களிலும் பிரசுரிக்கப்பட்டது. நாட்டு மக்கள் அனைவரும் அறிவர்.''- என்றனர் எதிரணியினர்.

''இவருக்கு எதிராக வழக்கு இருப்பதானால் அதன் இலக்கத்தையும் உறுதி படுத்திக் காட்டினால் இவ்விடயம் மேல் பரிசீலனை செய்யப்படும்.'' - என்று கூறினார் சபாநாயகர்.

**வழக்கு இலக்கம் சமர்ப்பிக்கப்பட்டது**

இப்படி விவாதம் சூடுபிடித்துக்கொண்டிருந்தபோது ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ரங்க பண்டார ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து, அமைச்சர் புஷ்பகுமாரவுக்கு எதிராக வழக்கு உள்ளது, அதில் நான்காவது எதிரியாக அமைச்சரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறியதுடன் வழக்கின் இலக்கத்தையும் குறிப்பிட்டார்.

''தாங்கள் காட்டுவது நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமானால் அதனை என்னிடம் சமர்ப்பியுங்கள். நான் பரிசீலனை செய்கிறேன்.'' - என்றார் சபாநாயகர்.

''ஐயா! இது எங்களுடைய சட்டத்தரணியின் மூலம் பெறப்பட்ட குறிப்பு. இன்னும் சில விநாடிகளில் உறுதிப்படுத்தப் பட்ட நகலை சமர்ப்பிக்கின்றோம்.'' - என ரங்க பண்டார கூறினார்.

தொடர்ந்து அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் ஆரம்பமானது.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்ன உரையாற்றியபின் அமைச்சர் மேர்வின் சில்வா உரையாற்ற அழைக்கப்பட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ரங்க பண்டார அமைச்சர் புஷ்ப குமாரவுக்கு எதிரான வழக்கின் உறுதிபடுத்தப்பட்ட ஆவண நகலை சபையில் சமர்ப்பிக்க முற்பட்டார்.

அப்போது சபைக்கு தலைமைதாங்கிய வண. உடுவே தம்மா லோக்க தேரர் அதற்கு அனுமதி அளித்தார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இதனை ஆட்சேபித்தார். ஒரு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, இடை நடுவில் எவருக்கும் பேச அனுமதிக்கக் கூடாது என்று கூறினார் பிரதமர்.

''ஐயா!, இந்த விடயம் ஒன்றும் புதியது அல்ல. சபாநாயகர் இவ்வழக்கில் உறுதிப்படுத்தப்பட்ட நகலை சபையில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டுள்ளார். அதன்படியே உறுப்பினர் ரங்கபண்டார அதன் நகலை இங்கு கொண்டு வந்துள்ளார். அதனை சமர்ப்பிக்க இடமளிக்க வேண்டும். - என்றார் எதிர்க்கட்சித் கொரடா ஜோஸப் மைக்கல் பெரேரா.

இக் கோரிக்கையின்படி உறுப்பினர் ரங்க பண்டாராவுக்கு ஒலிபெருக்கி வழங்கப்பட்டது. இது ஆளும் கட்சியினருக்கு சூட்டைக்கிளப்பிவிட்டது.

தமது ஆசனங் களில் இருந்து எழுந்து நின்று ஆர்ப்பாட்டம் செய்த அமைச்சர்களான மேர்வின் சில்வா, ஜயதிஸ்ஸ ரணவீர, சி.பி. ரட்ணாயக்கா, மஹிந்தானந்த அளுத்கமகே, புஷ்ப குமார உட்பட மேலும் பலர் கூட்டாக எழுந்து வந்து சபாபீடத்தை சுற்றி வளைத்துக் கொண்டு கூச்சல் இட்டு சபையைக் குழப் பினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர செங்கோலைத் தூக்க முயற்சித்தார். எனினும், படைக்கல சேவிதர்சாதுரியமாக அதனைத் தடுத்துவிட்டார். செங்கோல் மீது கை வைத்த அமைச்சருக்கு அதனைத் தூக்க முடியாமல் போய்விட்டது. சபையில் ஒரே ஆரவாரம், கூச்சல், குழப்பம்.

இந்தக் குழப்பங்களுக்கு மத்தியிலும் ஐ.தே.க. உறுப்பினர் ரங்க பண்டார, அமைச்சர் புஷ்ப குமாரவுக்கு எதிரான வழக்கின் நகலை சபையில் சமர்ப்பித்து விட்டார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய வண. உடுவே தம்மாலோக்க தேரர் பெரிதும் இக்கட்டான் நிலைக்குத் தள்ளப் பட்டார்.

நாட்டில் அமைதியையும், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. அந்தச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தின்போது நாடாளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

# இன்னும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும்.

கிழக்கு முற்றாக மீட்கப்பட்ட பின் அப்பகுதிகள் அனைத்தும் அபிவிருத்தி செய்யப்படும். அதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன் கொழும்புக்கு கொண்டுவரப்படவிருந்த வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட லொறி ஒன்றையும், ராஜகிரியவில் கிளைமோர் குண்டுகளையும் படையினர் கைப்பற்றி பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மிகவும் சிறப்பாகச் செய்திருக்கின்றனர்.

கடந்த ஒரு மாதத்தில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக 35 படையினரும் 32 பொதுமக்களும் கொல்லப்பட்டனர். அதேபோல் 71 படையினரும் 18 பொதுமக்களும் காயமடைந்தனர்.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிக்கும் படையினரின் தாக்குதல் இடைவிடாமல் தொடரும்.

- இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார். (சி)

# பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியர்களின் வாக்கு மூலங்களை மீளப் பதிவு செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது. (அ-1-ரி)

# மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது. குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும், மக்கள் நடமாட்டமும் வழமையான சுறுசுறுப்பும் மந்தமாக இருந்ததாகவே எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர். (அ-50-111-155)

# கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை ரத்துச்செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாநகர சபை ஏறாவூர்ப்பற்று, கோரளைப்பற்று, கோரளைப் பற்று வடக்கு, மண்முனை தெற்கு, எருவில்பற்று, மண்முனை, மண்முனை மேற்கு மண்முனை தென் மேற்கு, போரதீவு பற்று ஆகிய எட்டுப்பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களே ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மாகண சபைகள் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக் கோனினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைய மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்றும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
எதிர்பார்க்கை வினாக்களுடன்
1வது புவியியல் கருத்தரங்கு
திரு N. பாபு
ஆரம்பம் 08.07.2007
ஞாயிறு 12 மணி.

மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு
DBlock elements
Sat (07.07. 9.30 - 1.30
பண்பறிபகுப்பு Sun. (08.07. 9.30 - 1.30
By. அன்பழகன் B.Sc.
குறிப்பு: இன்னும் 100 மாணவர்கள் மட்டுமே அனுமதி
NEW SCIENCE CENTRE
யாழ். நகர்
Propritor: Poobalasingam.
(62492)


A/L 2009
LOGIC
அனுமானம்
ஆரம்பம் 07.07.2007
சனி காலை 7.00
Sat. / Sun - 7 - 8
By. P. கமல்
நாவலர்
ஆனைப்பந்தி,
யாழ். நகர்.

மாபெரும் கருத்தரங்கு
இந்து நாகரிகம்
திரு S. பத்மராஜா
எதிர்பார்க்கை வினாக்களுடன்.....
12ஆம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தமிழ் ஆசிரியர் திரு. குழந்தை அவர்களின் கருத்தரங்கு மிக விரைவில்....
(சி-52843)

போட்டிப் பரீட்சை வகுப்புகள் நடைபெறுகின்றன
சனி, ஞாயிறு 9 - 12
★ பட்டதாரி ஆசிரியர் தெரிவு
★ கனிஷ்ட ஊழியரை முகாமைத்துவ உதவியாளராக தரம் உயர்த்தல்
(பொது உளச்சார்பு, பொது அறிவு)
★ மாகாண முகாமைத்துவ உதவியாளர் தெரிவு
(பொது உளச்சார்பு, மொழியறிவு) சனி, ஞாயிறு 9 - 12
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக).
(62468)

English Literature
Paper Class & Discussion for
G.C.E.(O/L) Dec 2006 - Old Syllabus
Start on 07.07.2007 at 10.30
for Grade 10 - New syllabus
Start on 07.07.2007 at 2.30
LEC 105, Arasady Roaad,
Jaffna. Tel: 5889

## மரண அறிவித்தல்



### கந்தையா சற்குணநாதன்

ஒட்டுவெளி, மிருசுவிலைச் சொந்த இடமாகவும் 100/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சற்குணநாதன் 02.07.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வதிவிடத்தில் இன்று (06.07.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
100/1, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(62495)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.